The Journal of The Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library

EDITED BY

N. KANDASWAMY PILLAI,

Honorary Secretary,

T. M. S. S. M. Library, Thanjavur.

Vol. XXV **No. 3**

PUBLISHED ON BEHALF OF
THE ADMINISTRATIVE COMMITTEE OF THE LIBRARY

A. D. 1972 **Śaka 1894**

Annual Subscription Rs. 4.

The following back numbers of the Journal of The Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library are available for sale :—

Vol.	X	Number	1, 2 & 3	Price	Rs.	4—00
„	XI	„	„	...	„	4—00
„	XII	„	„	...	„	4—00
„	XIII	„	„	...	„	4—00
„	XIV	„	„	...	„	4—00
„	XV	„	„	...	„	4—00
„	XVI	„	1 & 2	...	„	3—00
„	XVIII	„	1, 2 & 3	...	„	4—00
„	XIX	„	„	...	„	4—00
„	XX	„	„	...	„	4—00
„	XXI	„	„	...	„	4—00
„	XXII	„	„	...	„	4—00
„	XXIII	„	„	...	„	4—00
„	XXIV	„	„	...	„	4—00

(Postage Extra)

Two copies of each book have to be sent for review in the Journal. Articles published in this Journal can be reproduced with the permission of the Editor. All communications regarding the Journal may be addressed to :—

THE EDITOR,
The Journal of the T. M. S. S. M. Library,
THANJAVUR, Tamil Nadu. (India)

The Journal of
The Tanjore Maharaja Serfoji's
Sarasvati Mahal Library

EDITED BY

N. KANDASWAMY PILLAI,

Honorary Secretary,

T. M. S. S. M. Library, Thanjavur.

Vol. XXV

No. 3

PUBLISHED ON BEHALF OF

THE ADMINISTRATIVE COMMITTEE OF THE LIBRARY

A. D. 1972

Śaka 1894

Annual Subscription Rs. 4.

CONTENTS

		Pages
1. Editorial	...	i–iii
2. சரப புராணம்		
Title Page & Introduction	...	i-vii
Text (completed)	...	65–74
—V. Chockalingam, Vidvan, Tamil Pandit, Sarasvati Mahal Library.		
3. சிவபாரத சரித்திரம்		
Title Page & Preface	...	i–iii
முன்னுரை	...	i–iii
Text (completed)	...	53–71
—M. Seeralan, Assistant Librarian, Sarasvati Mahal Library.		
4. பத்தியமும் அபத்தியமும்	...	i–viii
Title Pages & Introductions		
Text (Part I completed)	...	37–47
—C. Rajarajesvara Sarma, Ayurveda Siromani, Junior Research Officer, L. R. U., Sarasvati Mahal Library.		
5. निरूपणगुच्छ-भाग १		
Title Page & Preface	...	i–iii
पञ्चाक्षरी विभूति शिवरात्रि निरूपण-श्रीशरभेन्द्रविरचित	...	39
उमामहेश्वरव्रत निरूपण do.	...	40–46
—T. R. Bhima Rao, Marathi Pandit, Sarasvati Mahal Library.		
6. राधाकृष्ण विलास, मोहिनीमहेश परिणय नाटकें-श्रीशरभेन्द्रविरचित		
Title Page & Preface	...	i–iii
—T. R. Bhima Rao.		

7. नञ्वादटिप्पणम्, आख्यातवादटिप्पणम् च

Title Page & Introduction ... i–v

नञ्वाददीधितिः (मूलम्) ... i-ii

आख्यातवाददीधितिः (मूलम्) ... iii–viii

—N. K. Ramanuja Tatachariar, Siromani,
Sanskrit Pandit, Sarasvati Mahal Library.

8. अन्यथाख्यातिवादः - जयरामन्यायपञ्चाननकृतः ... 1–11

—K. E. Govindan, Siromani, Sanskrit Pandit,
Sarasvati Mahal Library.

The Journal of
The Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library

Vol. XXV A. D. 1972 Śaka 1894 No. 3

EDITORIAL

As already announced in our last Editorial, the serial articles which have been appearing in the past few issues are brought to a conclusion in this issue; but, our proposal to publish a comprehensive Index of all the articles contained in Volumes I to XXV of the Journal, along with this number, has to be postponed in order to allot sufficient space in this issue for completing all the serials. The proposed Index, which is under preparation, will be released as a separate Number soon.

Six short works in three different languages are completed here, furnished with Title pages and Introductions. *Śarabha purāṇā*, a mythological poem in Tamil, narrates, in 431 stanzas, the story of Lord Śiva's manifestation as a *Śarabha* to save the world from the fury of Narasimha, the Man-Lion incarnation of Lord Viṣṇu, persisting even after the destroying of Hiraṇya, for which purpose the incarnation was made. This work, edited by our Tamil Pandit, Vidvan V, Chockalingam is completed here and we hope that his introduction dealing with Purāṇic literature in Tamil will be of interest to the readers.

Thiru M. Siralan, our Assistant Librarian, completes here *Śivabhārata Caritram*, a prose version in Tamil of the Sanskrit epic poem of the same name, by Paramānanda Kavīndra, depicting the exploits of Śivaji, the Great. The manuscripts of the Sanskrit original and the Tamil translation are both preserved in this Library. The former has been published already by Bhārat Samśodhan Maṇḍal, Poona, with a Marathi commentary and by the Ānandāśrama Press, Poona, in mere text form. The Tamil translation is now brought out for the first time, with informative Introductions by the Editor in English and in Tamil.

One more work, *Pathyāpathya*, in the series of Guide books on health and hygeine, is edited by Āyurveda Śiromani, C. Rajarajesvara Sarma and the first part of it is finished in this issue. With the judicious selection of the original Sanskrit verses from standard classics in Āyurveda and the lucid translation into Tamil, the series has proved so popular that the earlier tracts of the series have become out of stock. The next part of Pathyāpathya and further tracts on allied topics will be continued in the subsequent issues of the Journal.

Two dramatic compositions of Maharaja Serfoji, *Radhakṛṣṇa Vilāsa* and *Mohini Maheśa Pariṇaya* have been completed already and the Title page and Introduction for the plays are provided here. It is our plan to bring out as many as possible of the varied compositions of Maharaja Serfoji, as a token of our tribute to the great and versatile Scholar-king. In pursuance of the plan, Thiru T. R. Bheema Rao, our Marathi Pandit has edited five works of Serfoji belonging to the category of *Nirūpaṇas* or musical expositions of Purāṇic and religious stories. These five Nirūpaṇas are completed in this issue with a brief introduction in English. There are in our library, a large number of compositions of this variety both by Rajah Serfoji and other royal-poets of the Maratha dynasty of Tanjore. Under the collective title of *Nirūpaṇa Guccha*, we are now publishing the five works as Part I. It is our intention to delight our readers with further parts of this Guccha in the following issues.

Two polemical tracts on advanced Nyaya, *Nañartha Śiromaṇi Tīkā* and *Ākhyātavāda Ṭippaṇam*, edited by Thiru N. K. Ramanuja Tatachariar, Nyaya and Mimamsa Siromani, one of our Sanskrit Pandits, are completed here, with a scholarly and critical introduction in Sanskrit. Both the tracts contain learned commentaries by Raghudeva on portions of *Dīdhiti*, the *magnum opus* of Raghnātha Śiromaṇi, itself being a scholarly commentary on *Tattvacintāmaṇi*, a reputed classic of Tarka Sastra by Gaṅgeśopādhyāya who may be rightly termed as the father of the school of *Navya Nyāya*. The former of these two tracts discusses the diversity in the significance of negative connotations and the latter dilates on the precise imports of the verbal injunctions in the Vedic texts. Though not of much

interest to the lay readers, we hope, the section will afford an intellectual treat to the scholars of traditional discipline.

Besides these serials which are concluded, this issue contains another polemical article on Nyāya entitled *Anyathākhyāti Vāda*, complete in itself, edited by Thiru Govindachariar, Nyāya Śiromaṇi, our Sanskrit Pandit who has joined our staff recently.

With this issue, the Journal of the T. M. S. S. M. Library completes twenty five years of its humble service in the field of Journalism. On this occasion, we take great pleasure in extending our heart-felt thanks to our readers, contributors, subscribers, patrons and to those distinguished institutions and editors who have held out to us their hand of comradeship by maintaining exchange relations with us. It is our fervent hope that, in future years, we will enjoy their support and patronage to a greater extent, as it is our resolve to serve them with greater zeal.

N. KANDASWAMY,
Honorary Secretary,
T. M. S. S. M. Library

Thanjavur,
4—8—1972.

சரப புராணம்

பதிப்பாசிரியர்:

வித்துவான் வி. சொக்கலிங்கம்,

தமிழ்த்துறை,

சரசுவதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர்.

தஞ்சை சரசுவதி மகால் நூல்நிலைய நிர்வாகக்குழுவுக்காக

கௌரவக் காரியதரிசி,

திரு. நீ. கந்தசாமிப் பிள்ளை அவர்களால்

வெளியிடப்பட்டது.

ஸ்ரீ வாணி விலாஸ அச்சகம், ஸ்ரீரங்கம்.

கி. பி. 1972] [விலை ரூ. 1-50

உ

தமிழ் வாழ்க

முன்னுரை

"திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை
உருநாம் அறியவோர் அந்தணனாய் ஆண்டுகொண்டான்
ஒருநாமம் ஓருருவம் ஒன்றும் இல்லாற்கு ஆயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ!"

என்றார் திருவாதவூரர் என்னும் மாணிக்கவாசகப் பெருந்தகையார். இப்பாடலுள், ஒரு வரலாறு கூறப்பட்டுள்ளது. அது திருமால் வராக உருக் கொண்ட வரலாறு. ஒருபோது திருமாலும், பிரமதேவனும் போட்டியிட்டுக் கொண்டு பெயருருவற்ற சிவபெருமானுடைய திருவடிகளையும், திருமுடியையும் காண்பான்வேண்டி, முறையே வராக உருக்கொண்டும், அன்ன(ப்பறவை)வுருக் கொண்டும் சென்றனர். அப்படிச் சென்றவர்கள் காணவியலாதவாறு திரும்பினர் என்பது ஒரு பழமையான வரலாறு. இதுபோன்ற பழமையான வரலாறுகளைக் கூறுவது 'புராணம்' எனப்படும். புராணத்தின் பெருமை அளவிடற்கரியது.

அனைத்துயிர்க்கும் அம்மையப்பனாக இருக்கின்ற இறைவனை 'ஒருநாமம் ஒருருவம் ஒன்றும் இல்லான்' என்று குறிப்பிடுகின்றார். அத்தகைய இறைவன் மதுரையில் அறுபத்துநான்கு திருவிளையாடல்களைப் புரிந்தார். அரும்பிட்டுப் பச்சிலையிட்டாட்செய்யும் அன்னையவள் தரும் பிட்டுண்ண, அவளது தலையன்பிற் கட்டுண்டு மண் சுமந்த அண்ணல், அரிமர்த்தன பாண்டியனால் மொத்துண்டு புண் சுமந்தார். இதுபோன்ற பல திருவிளையாடல்களைப் புரிந்த பரமன், சிவனடியார்கள் பொருட்டுப் பல அருஞ்செயல்களைச் செய்தார். திருத்தொண்டர் புராணத்துக் கூறப்படும் இறைத்திறம் வியக்கத்தக்கது. ஆளுடைய பிள்ளையார் முதலான சமய குறவர்கள் நால்வர்க்குமேயன்றி ஏனையோருக்கும் அருள்பாலித்தார். கண்ணப்பரின் அன்பைச் சோதித்தார். திருநீலகண்டரின் உறுதியைக் கண்டு வியந்தார். தீயவர்களை அழித்தும், நல்லவர்களைக் காத்தும் வருகின்ற இறைவனுடைய கருணை எண்ணிலடங்காது.

தேவரேயாயினும், மூவரேயாயினும் தாம் செய்த அருஞ்செயலால் அகந்தை கொள்ளக்கூடாது என்ற நீதியை வலியுறுத்துவான்வேண்டி எழுந்ததே இச் 'சரபபுராணம்' எனலாம். திருமால் நரசிங்க உருக்கொண்டு தோன்றி 'இரணியகசிபு' எனும் கொடியோனை அழித்தது சாலவும் நன்று. அத்துடன்

அமையாமல் உலகைத் துன்புறுத்தி வருத்தத் தொடங்கியதால் சிவபெருமான் சரப வடிவெடுத்து நரசிங்கவடிவத்தைக் கிழித்தழிக்க நேர்ந்தது. கருணைக்கடல் நரசிங்கவடிவத்தை அகற்றினரே தவிர, திருமாலை அழித்துவிட்டதாகக்கருத்தல்ல. திருமால் நரவரி வடிவுகொண்டது, 'விட்டுணுபுராணம்,' 'இலிங்கபுராணம்' முதலான நூல்களில் காணப்படும். விட்டுணுபுராணம் முதன் முதலில் மைத்திரேயர் வணங்கிக் கேட்ப, பராசரமுனிவரால் திருவாய்மலர்ந்தருளப்பட்டது. மச்சாவதாரம் முதலான பத்து அவதாரங்களின் மேன்மையும், மற்றைய சிறப்புக் களும் விட்டுணுபுராணத்தில் கூறப்பட்டுள்ளன.

இலிங்கபுராணம் பதினெண் புராணங்களில் ஒன்று. வியாச முனிவரால் அருளிச் செய்யப்பட்டது. சரபாவதாரத்தின் மேன்மையினைப் பிரமதேவன் கலைமகளிடம் கூறியதாகத் தொண்ணூற்றாறுவது அத்தியாயம் கூறுநிற்கும். இலிங்கபுராணம் பதினோராயிரங் கிரந்தங்களைக் கொண்டு வடமொழியில் விளங்கியதனைத் தமிழில் வரதுங்கராம பாண்டியனர் மொழி பெயர்த்துள்ளார்.

சரபபுராணம், திருமுனிவன் சூதபகவானைக் கேட்க வருளியதாக (11-ம் பாடலில்) பேசப்படுகிறது. நந்திதேவர்பால் சனத்குமாரர் கேட்டு வியாசமுனிக்குச் சொல்ல, அவரிடமிருந்து சூதமுனிவர் கேட்டுத் திருமுனிக்கருளியதாகக் கூறப் படுகிறது. (11 & 12-ம் பாடல்கள்) அப்படிச் சொன்னதை மதுரையிலுள்ள திருத்தொண்டர்கள் வேண்ட, வடமொழியிலிருந்து தமிழில் கூறப்பட்டதாக 13-ம் பாட்டால்) தெரிகின்றது. பின்னர் (14ம் பாடலில்) அவையடக்கத்தினையும், (15-ம் பாடலில்) இதில் வரும் சருக்கங்களையும் கூறுகின்றார்.

நூலாசிரியர்

இந்நூல் எமது மகால், தமிழ்ச்சுவடி எண் (M. No.) 279 னைத் தாங்கி நிற்பது. இதில் சரபபுராணம், ததீசிப்புராணம், வினவிடைப் புராணம் ஆகிய மூன்று பகுதிகள் உள்ளன. இதனை இயற்றியவர் பெயர் தெரியவில்லை யாயினும், இந்நூலின் கடைசியில் "சிதம்பரபுராணமருளிச் செய்த 'திருமலை நாயனு' ரருளிச்செய்த சிவபுராணத்தில் வினவிடைப் புராணம் முற்றும்" என்றுளதைக்கொண்டு, எமது மகால் முன்னைநாள் தமிழ்த்துறைத் தலைவர் (காலஞ் சென்ற) திரு. L. உலகநாதபிள்ளை அவர்கள்; "இவ்வாக்கியத்தை ஆராயு மிடத்து மேற்கண்ட மூன்று புராணங்களும் சிவபுராணத்தினைச் சேர்ந்தவை என்றும் இயற்றியவர் திருமலை நாயனர் என்றும் உய்த்துணரக் கிடத்தல் காண்க" எனக் கூறிப்போந்தார். இதனல் இதனை இயற்றியவர் 'திருமலை நாயனர்' என்று ஒருவாறு கொள்ளலாம்.

அவ்வாறு கொண்டால், 'புராணத்திருமலைநாதரின் வேறுபட்டவர் எனக் கொள்ள இடமிருக்கின்றது. புராணத் திருமலைநாதர் காஞ்சி ஞானப்பிரகாச மடத்தைச் சார்ந்து சமயதீக்கை பெற்றவர்; 16-ம் நூற்றுண்டினர். தில்லை மூவாயிரவர் வேண்டுகோளின்படி சிதம்பரபுராணத்தினை வடமொழியினின்றும் தமிழிற் பாடியதோடல்லாமல் திருவாலவாயடைந்து, சோமசுந்தரக் கடவுளின் அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும் 516 கண்ணிகளில் அமைத்துச் "சொக்கநாதர் உலா" என்னும் நூலையும் பாடியவர். எனவே சரபபுராண நூலாசிரியர், சிவபுராணம் செய்ததாக அறியக்கூடவில்லை. ஆகவே இன்னாரெனத் துணிந்துகூற இடமில்லை.

புராணம்

'புராணம்' என்ற சொல்லுக்குப் பழமையான வரலாறு என்றுபொருள். பண்டுதொட்டு இன்றுவரை பரவி இருக்கிறது எதுவோ அதுவே 'புராணம்' எனப் படும். என்று 'வாயுபுராணம்' கூறுகின்றது. கௌடில்யர் தமது அர்த்தசாத் திரத்தில் 'அரசகுமாரர்கள் கற்கவேண்டிய நூல்களில் புராணமும் ஒன்று' என்று கூறியுள்ளார். "ஆயகலைகள் அறுபத்துநான்கில் ஒன்று புராணம். அது, உலகத் தோற்றம், ஒடுக்கம், மனுவந்தரம், முனிவர் மரபும் வரலாறும், அரசர் மரபும் வரலாறும், ஆகிய ஐந்து இலக்கணங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்" என்பார் பண்டை நிகண்டாசிரியர்கள்.

புராணங்களை, மகாபுராணங்கள் பதினெட்டு என்றும், உப புராணங்கள் பதினெட்டு என்றும், அதிபுராணங்கள் பதினெட்டு என்றும் மூவகையாகப் பிரிப்பர். அவையாவன:—

மகா புராணங்கள்

1 ஆக்கிநேய புராணம்
2 இலிங்க புராணம்
3 ஸ்காந்த புராணம்
4 காருட புராணம்
5 கூர்ம புராணம்
6 சைவ புராணம்
7 நாரதீய புராணம்
8 பதும புராணம்
9 பவிஷ்ய புராணம்
10 பாகவத புராணம்
11 பிரம்ம புராணம்
12 பிரம்ம வைவர்த்த புராணம்
13 மச்ச புராணம்
14 மார்க்கண்டேய புராணம்
15 வராக புராணம்
16 வாமன புராணம்
17 வாயு புராணம்
18 விஷ்ணு புராணம்

உப புராணங்கள்

1 அவுசன புராணம்
2 கபில புராணம்
3 காந்த புராணம்
4 காளிக புராணம்
5 சனத்குமார புராணம்
6 சாம்பேச புராணம்
7 சிவதரும புராணம்
8 சௌர புராணம்
9 துருவாச புராணம்
10 நந்தி புராணம்
11 நாரசிங்க புராணம்
12 நாரத புராணம்
13 பராசர புராணம்
14 பிரமாண்ட புராணம்
15 மகேசுவர புராணம்
16 மாரீச புராணம்
17 மானவ புராணம்
18 வருண புராணம்

அதி புராணங்கள்

1 ஆதிக புராணம்
2 இலக்குமி புராணம்
3 கர்க்க புராணம்
4 கல்கி புராணம்
5 சண்டி புராணம்
6 சிவோத்தர தரும புராணம்
7 தேவி சரித விரிவுப் புராணம்
8 பசுபதி புராணம்
9 பராநந்த புராணம்
10 பவிஷ்யோத்தர புராணம்
11 பார்க்கவ புராணம்
12 பிருகத் தர்ம புராணம்
13 பிருகத் வாமன புராணம்
14 பிருகந் மாத்ஸ்ய புராணம்
15 பிருகத் நாரதீய புராணம்
16 மகா பாகவத புராணம்
17 முத்கல புராணம்
18 வசிட்ட புராணம்

மகா புராணங்களாகிய பதினெண் புராணங்களுள், இலிங்கம், ஸ்காந்தம், கூர்மம், சைவம், பவிஷ்யம், பிரமாண்டம், மச்சம், மார்க்கண்டேயம், வராகம், வாமனம் ஆகிய பத்தும் சிவபெருமான் பெருமையினைக் கூறுவன. காருடம், நாரதீயம், பாகவதம், வைணவம் ஆகிய நான்கும் திருமாலின் பெருமையினைக் கூறுவன. பதுமம், பிரமம் ஆகிய இரண்டும் பிரம்மாவின் பெருமையினைக் கூறுவன. பிரமவைவர்த்தம் சூரியனது பெருமையினையும், ஆக்கினேயம் அக்கினியினுடைய பெருமையினையும் கூறுவன.

பதினெட்டு உபபுராணங்களும் சிறப்புடையன. மகா புராணங்களுக்கு உதவியாக இருப்பதால் 'உபபுராணம்' எனப் பெயர்பெற்றது. இவற்றுள் சில வியாசரால் இயற்றப்பட்டவை,

அதிபுராணங்கள் பதினெட்டுடன், விநாயகர் சரிதவிரிவு என்பதனையும், கிருஷ்ணாவதாரக் கதை என்பதனையும் சேர்த்துக் கூறுவாரும் உளர்.

மேலும் புராணங்கள் பலவகைப்படும். இலக்கண புராணம், சைவ புராணம், வைணவபுராணம், சைன புராணம், மகம்மதிய புராணம், கிறித்தவ புராணம், பெரியார்கள் புராணம், புலவர்கள புராணம், தலைவர்கள் புராணம், அரசர் புராணம், நிலம், நீர், தீ, வளி, வான் ஆகிய ஐந்து பூதங்களையும் பற்றிக் கூறும் புராணங்கள் ; மற்றும் பல.

இலக்கணத்தினைச் சூத்திர வெண்பாவால் விளக்கிக் கூறுவது 'மாபுராணம்'. சிவபெருமானுடைய பெருமையினை உணர்த்துவதில் தலைசிறந்த புராணங்களாக விளங்குவன, 'திருத்தொண்டர் புராணம்' எனும் 'பெரிய புராண'மும், 'திருவிளையாடற் புராண'முமேயாம். விநாயகரைப் பற்றிக்கூறுவது 'விநாயக புராணம்'. முருகவேளின் மெய்க்கீர்த்தியினைக் கூறுவது 'கந்த புராணம்'. திருமாலின் பெருமையினைக் கூறுவன 'பாகவதம்' முதலிய புராணங்கள். சைனர்கட்கு இன்றியமையாப் புராணமாக விளங்குவது 'ஆதி புராணம்'. அது 'ஸ்ரீபுராணம்' எனவும் பெயர்பெறும். மேருமந்தர புராணமும் சமண புராணமே. நபிகள் நாயகத்தின் வரலாற்றினைக் குறிக்கும் மகம்மதிய புராணங்கள் 'சீருப்புராணம்', 'முகையதீன் புராணம்' முதலியன. கிறித்தவ புராணம் 'தேம்பாவணி'. பெரியார்களின் புகழைக் கூறும் புராணங்கள், 'சேக்கிழார் புராணம்', வாதவூரடிகள் புராணம்', 'பட்டினத்துப் பிள்ளையார் புராணம்' முதலியன. புலவர்களின் புகழைக்கூறுவது (புலவர் புராணம்). தலைவரைப் பற்றிக்கூறும் புராணம் 'காந்திப் புராணம்'. அரசன் பெயரால் விளங்குவன 'தேரூர்ந்த சோழ புராணம்' முதலியன. நிலத்தைப்பற்றிக் கூறும் புராணங்கள் தலபுராணங்கள் எனலாம். அவை எண்ணிறந்தன. அவற்றுள் பல தலபுராணங்களை இயற்றியவர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் ஆவார்கள்.

சரப புராணம்

'சரபம்' என்பது எண்காற்புள். 'சிம்புள்' எனவும் வழங்கப்பெறும். திருமால் எடுத்த நரசிம்மம், மனித உடலும், சிங்கத்தலையும் கொண்டது. அதனை அழிக்கச் சிவபெருமான் கொண்ட சரப உரு, பாதி மிருக உடலும், பாதி பறவை உடலும், மனிதமார்பும், தோள்களும், நான்கு திருக்கரங்களும், சிம்மத் தலையும் கொண்டது. தத்துவம் நிரம்பப்பெற்ற இவ்வுருவத்திற்கே உரிய இடமாகத் தோன்றுவது 'திருபுவனம்'. தமிழகத்தே மாயூரத்தை அடுத்துள்ளது. தருமையாதீனத்துத் தற்போது 26-வது குரு மகாசந்நிதானமாக எழுந்தருளியுள்ள ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் அருளாட்சிக்குட்பட்டது. மெய்யடியார்கள், சோமசுந்தரக் கடவுளைப் போக,

யோக, வேக வடிவங்களில் வழிபடுவர். அவற்றுள் வேகவடிவமே 'சரப உருவம்'. மக்களின் துன்பம் துடைத்து, இன்பத்தினை நல்கவல்லது வேக வடிவம் என்பர் அறிஞர்.

சிவபெருமான் நரசிங்கத்தை அழிக்க வீரபத்திரரை ஏவினார். ஆயிரம் கைகளுடன் விளங்கும் அவர் சிவனருளால் தன் உடலின் ஒரு பாதி கொடிய விலங்காகவும், மறுபாதி கொடிய பறவையாகவும் உருக்கொண்டார். அயன் படைப்பிலேயே அடங்காத மிருகப்பறவை உருவத்தோடு, எட்டுக்கால்களுடனும், கூரிய நகங்களுடனும், இரு இறக்கைகளுடனும், நீண்ட வாயுடனும், கூர்மையான பற்களுடனும், கூர்ந்து நீண்டு வளைந்த மூக்குடனும், உருண்டு திரண்ட பெரிய கண்களுடனும், மான் மழுவேந்திய கரங்கள் இரண்டும், அபயவரத கரங்கள் இரண்டும் ஆக நான்கு கைகளுடனும், பரந்து அகன்ற திண்ணிய மார்புடனும் விளங்கினார். இதனைச் சோண சைலமாலை :

" சிம்புளாய் மடங்கல் எறுழ்வலி கவர்ந்த
 திறலும் முப்புரஞ்சுடு விறலும்
அம்புயாதனத்தன் முடி களைந்திட்ட
 அடலும் ஏத்தினர்க் கிடருளதோ ! "

என்று கூறும் நரசிம்மாவதாரத்தால் மூவுலகத்தவருக்கும் ஏற்பட்ட துன்பத்தை, நடுக்கத்தை, கம்பத்தைப் போக்கியதால், திருபுவனத்தெம்பெருமானுக்கு 'கம்பஹரேசுவரர்' என்னும் 'நடுக்கம் தவிர்த்த பெருமான்' என்ற பெயருண்டாயிற்று.

'இப்பெருமானை வணங்கும் யாவர்க்கும், எல்லாத் தீவினைகளும் தீர்ந்து நன்மை உண்டாகும் என்று 'சரபோபநிஷத்' கூறுகின்றது. சரப உருவ மூர்த்தியினை திருபுவனமேயன்றி, திருஆனைக்கா, புதுக்கோட்டை முதலான இடங்களிலும் காணலாம்.

சரப புராண வரலாறு

முன்னொரு காலத்தில் மூவுலகங்களையும் துன்புறுத்திவந்த இரணியகசிபு, எல்லோரும் தன்னையே வணங்கவேண்டும் என்று கட்டளையிட்டிருந்தபடியே எல்லோரும் 'இரணியாய நமః' என்று சொல்லி அவனையே வணங்கிவந்தனர். இப்பி வயிற்றில் முத்து பிறக்குமாப்போலே அவன் வயிற்றில் பிரகலாதாழ்வார் தோன்றி, அனைத்துலகினையும் காக்கும் கடவுளாம் திருமாலின் "நாராயணாய நம:" வென்னும் ஆதிமூல மந்திரத்தினை உலகறியச் செய்தார். செருக்குற்ற இரணியகசிபு "அந்த நாராயணன் எங்குளான்" என்று கேட்கவே "அவன் தூணிலும் இருப்பான் ; துரும்பிலும் இருப்பான்" என்று பதிலளித்தார் பிரகலாதர். "இந்தத் தூணில் காட்டுவையோ" என இயம்பித் தூணை உதைத்தான். திருமால் நரசிங்க உருக்கொண்டு அத்தூணில் தோன்றி, இரணியகசிபுவைக் கொன்று, மூவுலகத்துள்ளோரைக் காப்பாற்றியதாகப் புராணங்கள் கூறும்.

அதன்பின்னர், நரசிங்கமூர்த்தி, இரணியன் உடலைக் கிழித்து, அவன் குடலைப் பிடுங்கி, அவனது உதிரத்தைக் குடித்தமையால் மதிமயக்கமுற்று, தாம் செய்த செயற்கரிய செயலுக்காகச் செருக்குற்று, உலகத்தையே துன்புறுத்தி அழிக்கத் தொடங்கினர். தேவர்கள் அஞ்சி, சினம் தணிய நரசிம்மமூர்த்தியை வேண்டினர். ஆனல் நரசிம்மமோ மேலும் வீறுகொண்டு உலகை அழிக்கத் தொடங்கியது. தேவர்கள் கைலைநாதனை அடைந்து பணிந்தனர். அவரும் வீரபத்திரரை அனுப்பி, நரசிம்மத்திற்கு அறவுரை கூறுமாறு அனுப்பினர். அறவுரையினைக் கேளாத மறமடங்கலை சரப உருக்கொண்டு தோன்றி அழித்துத் திருமாலை முன்போலவே தோற்றுவித்து அருளினர்.

இச்சரப புராணத்துள், காப்புச் செய்யுள், பதிகம் அன்றி, 1. நரசிங்க உற்பத்திச் சருக்கம், 2. கடவுளர் முறையிடு சருக்கம், 3. வீரபத்திரன் எழுச்சிச் சருக்கம் 4. அறிவுறுத்திய சருக்கம் 5. சலந்தரன் வதைச் சருக்கம், 6. சக்கரம் பெற்ற சருக்கம், 7. நரசிங்கவதைச் சருக்கம் ஆகிய ஏழு சருக்கங்கள் காணப்படுகின்றன. இறுதியில் உள்ள வாழ்த்துச் செய்யுட்கள் அழகாக உள்ளன.

இதனேடு தொடர்புடைய ததீசிபுராணம், வினாவிடைப் புராணம் ஆகிய இரண்டும், இறைவன் கருணை துணைசெய்யுமாயின் விரைவில் வெளிவரக்கூடும்.

இச்சரப புராணச் சுவடி ஒடிந்தும் சிதைந்தும், உள்ளது. இதன் கண்ணுள்ள பிழைகளை நோக்கும்போது, இது மூலத்தின்படியே என்று விளங்குகின்றது. மூலச்சுவடி கிடைக்குமாயின் இந்நூல் நன்கு பரிமளிக்கும். இதனை ஆய்ந்து வெளியிட அனுமதியளித்த எமது மகால் கௌரவக் காரியதரிசி தமிழ் மூதறிஞர், திரு. நீ. கந்தசாமிப் பிள்ளை அவர்கட்கும், நூலகர் திரு. வே. கோபாலய்யங்கார் M.A., அவர்கட்கும் எனது நன்றி உரித்தாகட்டும். இந்நூலின்கண் உள்ள குற்றம் களைந்து குணங்கொண்டு மணம் பெறுதல் கற்றறிந்த மாந்தர் கடன். இந்நூலினைப் பெற்றுப் பயனடைவோர் துன்பம் நீங்கி எல்லா நலன்களையும் பெற்று இன்புற்று வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

> "ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்
> உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
> எய்யாமற் காப்பாய் எமை".

இங்ஙனம்

தஞ்சாவூர்.
27—2—72

வித்துவான் வீ. சொக்கலிங்கம்,
தமிழ்ப் பண்டிதர்,
சரசுவதி மகால் நூல் நிலையம்.

விண்ட(தோ தொ)ல்லைக் குலகிரி பலவும்
வேர்பறிந் துக்கதோ வில்லை
யெண்டிசா முகம டிந்ததோ வில்லை
யெங்கணு நிலையினின் றதுவா
லண்டநா யகன்றன் பெருந்திருக் கருணை
யிளமை(வயா) ரறிந்துரைக் கிற்பார். கக

வாக்கினு லுரைக்க வெளியவோ சிறிது
மனத்தினுல் நினைக்கவுட் படுமோ
நோக்கினு னோக்க வளவுகண் டிடுமோ
நுவலரு மறை(முத) லறிவாற்
ருக்கொணுக் கருணை சிவபரஞ் சோதி
(தொ)ல்பூ தரங்களை யருளாற்
காக்குமா றெடுத்த வடிவமென் றுகந்து
கடவுளர் கைதொழு துரைதர. கஉ

(அட)ல்புனை வீர பத்திக் கடவு
ளகிலமும் பரவிய சரபத்
திடவுரு வதனைக் கண்டுட னடுங்கிச்
செய்கையும் வன்மையும் பொன்றிச்
சுடர்திக ழிரவி முன்னமின் மினிபோற்
றேற்றமுஞ் சீற்றமுங் குலைய
படர்வுறு நடுக்கம் படைத்தது மிகவும்
பரிணவம் பெருநர மடங்கல். கங

தவமுனி வரரும் பிரமனுங் கடவுடா
(ன)த்துமுன் பார்த்துநின் றேத்தப்
பவவினை யுடைய நரமடங் கலின்மேற்
பாய்ந்தொளிர் சாந்தநீ றணியுஞ்
சிவபரஞ் சுடரை யகிலனு யகனைத்
தேமொழி (பாக)னை மதியா
தவமதித் துரைத்தவா யதனைப் பற்க
ளுக்கிடச் சிறகரா லடித்து. கச

மறுகுற வலிய தாள்கொடு மிதித்து
வால்கொடு தாளினை(ப்) பிணித்துச்
செறுந (ரவர்தன்) கரங்களை விளங்குந்
திருக்கரங் கொண்டுபின் கட்டிச்

சிறிதகல் மார்பை நாபியைக் கமலச்
செங்கையாற் ருளிறுற் பிளந்து
குறுகரு முரகற் பற்றிவெங் கலுழன்
கொதித்தெழ லென்னமீ தெழுந்தான். கரு

பாரிடைப் போகட் டெடுத்துமீண் டிட்டுப்
படரருந் திசையெலா முருட்டிப்
பேரிட ரடையச் சிறகரா லடித்துப்
பிதிர்ந்(தெலும்) புக்கிட மிதித்துக்
கூரட ருகிரால் மார்பகத் துதிரங்
குதித்தெழ மிகப்பிளந் துடலி
ஞருயிர் குறைந்து மானிட மடங்க
லவச முற்றிட வடர்த்(ததா)ல். கசா

அரிதனை யடலாற் சங்கரிப் பவனென்
றருமறை புகழ்பரம் பரனை
விரிதரு நேயத் தேத்திச் சாமுக
மிகுநர மடங்கலை யடர்த்த
தெரிவருந் (திற)லுங் கருணையுங் கண்டு
திசைமுகன் புரந்தரன் முதலோர்
பரிபவ மிகந்து மலர்மழை பொழிந்து
பரவினர் சரபநா யகனை. கஎ

தராதல முழுது மிதந்தது (துவ)ன்றித்
தழைத்தது மகிழ்ச்சியவ் வளவி
லராவணை யவனுஞ் செய்கையொன் றின்றி
யாவியுங் குறைந்துமுன் னறிவாற்
பராபரன் பெருமை யறிந்தவா வணங்கிப்
பகர்(வொணு) தழுதழுப் புறமேற்
சுராதிபர் காண வறிந்தவா றெல்லாஞ்
சோர்வற முன்றுதித் தனனல். கஅ

வேறு

பரசிவ சங்கர புனித சடாதர
பழுதறு செய்கையமுப்
புரவா வடசிலை யான்க ளிற்றுரி
புலிய(தள் பு)னையமலர்

பிரம கபால வுயிர்க்குயி ராகிய
பெரும மகேசவுருத்
திரசர பத்துரு முதல்வசி தம்பர
தினகர நீசரணம். கக

உமையவ டலவ வுமைக்கொரு பாக
வுமைக்கு நலந்தருவா
யிமை(யவர்) நாயக மந்திர ரூபவி
ளைப்பையொ ழித்தருள்வாய்
சமர நெடுங்கொடு மூவிலை வேல
சதாசிவ விறுதியிலா
யெமது கருத்த வுரூப பகீரதி
யிறையவ நீசரணம். உ0

அறமுத லுத(விடு கௌ)சிக நாச
மகற்றிய வீரதரா
மறைமுடி வுறுபொரு ளாதி விரித்தருள்
வரத குணத்தரவெங்
கறைபணி கண்ட மலங்க ளகற்றிய
காரண காரணிதாய்
பிறைய(ணி (மவுலிய குறி)யவ நெடியவ
பெரியவ நீசரணம். உக

நினைத்தவி டத்திலு தித்தருள் வானவ
நீள்புவி வானுலக
மனைத்தும் விதித்தவ சஞ்சல நீறணி
யாகபி னாகதரா
வினைப்பவ வாரி(யி) னுங்கரை யுய்த்தருள்
விரதவி டைக்கொடியாய்
நனைக்கணை வேளை யெரித்தபு ராதன
நகைமழு வாய்சரணம் உஉ

அனலுரு வாகிய வீரிய வுண்மைய
வாடக மாவடிவா(ய்)
(ம)னமொழி மெய்யணு காதவ பூத
மயக்கம ழித்தருள்வாய்
தனதறு ஞானியர் சேருநி ராதர
சரவண பவனைமகிழ்ந்

துனதரு ளாலரு ளனகவு ழைக்கர
வொருமுதல் வாசரணம். உஉ

தானவர் கவசம றுத்தருள் வாயெழு
தானவர் கிளையடுவாய்
[1] வானவர் (மானவர்) நன்மை பெறத்தகு
வாயுர காபரணு
கானவர் வேடவு யிர்க்கொ(ரு) நாயக
கண்ணுத லாயிமையோ
ரானவ ரியாரையு நல்கும கேசவ
சோகமு ளாய்சரணம். உச

யாவுமொ டுக்கிய காலப ராபர
யாவும ளித்தருள்வாய்
தேவர்கு லாதிப நீலவு ருத்திர
சேயொளி யாய்விடையாய்
தாவில காலநி ணைத்தவை தந்தருள்
தண்ணளி யாய்விரைவின்
மேவரு மிச்சையில் வடிவமெ டுத்தருள்
வித்தக நீசரணம். உரு

முக்கணெ ருத்தப வப்பெரு நோயை
முருக்கும் வயித்தியவத்
[2] த(க்)கன் மகத்தை யழித்தரு ளத்த
சடாதர முண்டிதரா
மெய்க்கண மாதவர் நாயக பூதம்வி
ளங்கந லந்தருவா
யுக்கிர மிக்கப யங்கர மாகிய
வுருவுடை யாய்சரணம். உசு

(தரு)பத வேட்டுரு வாபிர ணவவுரு
வுத்தம வுலகினிலாத்
திருவரு வாளவு ரைக்கதி பாகரு
ணாகர திறலுடையாய்
மருவரு சேவக பத்திர வீரம
றத்தொழி லா(ய்)சுகமே

---

1. இவ்வரியில் ஐந்து சீர்களே உள்ளன; மானவர் சேர்க்கப்பட்டது.
2. தகனம் என்றுளது.

தருமுதல் வாபக லவனய னங்கவர்
சயதர நீசரணம். உஎ

எனையுறை விடமென வுறையபி னவமனை
வியுமென வெனையுடை(யா)
(யென)துரு வம்பல முடியவ ழித்தரு
ளினிதில ளித்தருள்வா
யெனதுடன் மேலிடு நரகரி மால்வடி
வெஞ்சமு டித்தருள்வா
யெனவொரு நூறுட னெட்(டுமந் திர)மு
மினிதுது தித்தனனுள். உஅ

வேறு

துன்று பேரமிர் தன்னவித் துதிகளாற் றுதித்து
மொன்றி ரண்டுமுன் னொருபது நூறொடா யிரமு
மன்றி யெண்ணில(ா யிரமா) மடியனேன் வணக்க
மின்று கோடியென் றிறைஞ்சியும் பின்னரு மியம்பும். உக

சரப மாகிய திருவுருத் தலைவசங் கரயான்
விரவு நல்லறி விழந்துனை மறந்தெனை வியந்(து)
(பரவு) தீங்குறு நாளவை தவிர்த்துனைப் பார்க்கும்
வரமுகந் தருள நின்பெருங் கருணையின் வழக்கால். ௩0

அறிவொ ழிந்தெனை மதித்துரை செய்தது மயன்பாற்
குறியிகந் (தவனை) (ம)தித்தனை யென்றுகூ றியதுஞ்
சிறிய னேனினைப் போற்றுமிச் செய்கையா னமையாற்
பொறிக டந்தநின் பெருமையாற் பொறுத்தனின் கடனால். ௩க

சிறந்த வாசக மின்னன செப்பினன் மறைநூ
லறங்க டந்திறை வனையவ மதிபுரி செயலால்
மறம்பு ரிந்திடு மானிட மடங்கலின் வடிவந்
துறந்து றைந்தனன் பங்கய மலர்மக டுணைவன். ௩உ

மதமொ ழிந்துயிர் துறந்தவெம் மானிடச் சிங்கத்
ததளுரித் தெடுத்தா னனங்க வர்ந்துவா னவரற்
புதம டைந்திட மற்றுள வுறுப்பெலாம் புவிமேற்
சிதறி யர்க்கையைச் சிதைத்தனன் தேவர்க டேவன். ௩௩

பிரம ஞாதிய ரிமையவர் பெருகு பொருள்கூர்
சரப நாயகற் பார்த்தெதிர் தாழ்ந்துந் தலைமேற்
கர(ம) கிழ்ந்திடக் கண்கணீர் பொழிந்திடப் புளகம்
பரவ வுண்ணெகி ழன்புட னின்னன பகர்வார். ௩௪

மாரி பெற்றருங் கோடையில் வெம்மையை மாற்றி
நீர்த ரத்தருந் தழைத்தன நிகர்ப்பநின் னருளால்
வீர மிக்கெழு நரகரி வெந்தொழில் தவிர்த்திங்
கியாரு முற்றன மிடைவிடா மகிழ்ச்சியிங் கிறைவா. ௩௫

சுத்த வித்தையா யீசுரமாய்ச் சுடர்சதா சிவமாய்ச்
சத்தி யாய்ச்சிவ மாகுமித் தன்மையுங் கடந்து
சுத்த நல்லொளி யென்றுனைச் சொற்றன ருணர்ந்தோ
ரத்த நின்றற மெங்களா லறிதரற் கெளிதோ ! ௩௬

அண்ணல் நின்றிற மெங்களாற் கருதிட (ல)ரிதே
லெண்ண ருங்கொடு வினையினு லெடுத்தவிப் பிறப்பிற்
கண்ணி லாதவன் வேறொரு வனைப்பினைக் காண
வெண்ணு மோவதற் கொக்குமா லுரைப்பதென் னினியே. ௩௭

நிருத்த வானவ நிராமய பதினொரு பேத
வுருத்தி ராதிப வீரபத் திரவரு ளுருவ
வருத்த மெய்திய போதெலாம் வந்துநீ புரந்தெங்
கருத்த னென்பது முணர்ந்து (நின் னு)ணையின் புறத்தால். ௩௮

எந்த நாளினும் யாமிட ரிப்படி யடைந்தால்
வந்து நீபுரந் தளித்திட மனத்திடை கொண்டியா
முய்ந்தி டாதுநின் மாயைய(ால் மாய்)ந்திட ருழந்தோ
மந்த மொன்றிலாய் நின்றிருப் பெருமையா ரறிவார். ௩௯

துன்றிச் செஞ்சுடர் பரப்புமெய்த் தூமணி தன்னைக்
குன்றிச் செம்மணி யொப்பெனக் கு(றித்தல் போ)ல
வொன்றிற் கொப்பிலா வுன்னுடன் யாங்களுந் தேவ
ரென்றிப் புன்றகை யடைந்ததும் [1]பொறுத்துநீ யிறைவ ! ௪०

பூந்து ழாய்முடி நரகரி பொன்(றிய கோபங்)
காய்ந்து வான்புவி காத்தருள் கருணையாய் நின்னை
யாய்ந்த வேதநூ லறிவுடை யந்தணர் கோபஞ்
சார்ந்த மென்றிரு விதமுறச் சாற்றுவா ர்றிந்தே. ௪௧

1. 'பொறுத்திநீ' எனல் பொருந்தும்.

பருதி மாலன லாதி(ய நீற்)றரு மகோர
ஒருவி னாற்கரு தார்வலி யொழிப்பது மன்றித்
தரும மாமதி நியாயமாஞ் சாந்தவே டத்தா
ரருள்சு ரந்துல களிப்பது மையநின் கடனால். ௪௨

ஆத லாலெமைப் (புரத்த)ல்நின் னருடிரு நெடுமால்
வேத நான்முகன் வாசவன் முதலிய விண்ணோர்
பேத முள்ளன கலாதிகள் மனாதிகள் பிறங்கும்
பூத முள்ளன புரக்குநின் பெருமையார் புகல்வார். ௪௩

முகுந்த னான்முக னாதிய தேவரை முடிக்கு
மிகுந்த செய்கையா லரனென விளம்புவர் மிக்கோர்
சகங்க ளெண்ணில வேட்டுரு வந்தனைத் தாங்கி
யுகங்கள் பற்பல புரந்தநிற் கொப்பவ ரெவரோ ! ௪௪

ஞான நாயக நினையுணர் ஞானமொன் றில்லா
ஊன மார்ந்திடு மெம்மையும் புரந்தரு ளாதவென்
றான வன்பொடு பன்முறை யறைந்தனர் பணிந்தார்
வான நாடரும் பிரமனு மாதவர் கணமும். ௪௫

ஏத்தி யங்குநின் றருளுட னிறைஞ்சிய விமையோர்
சாத்து மாதவர் தொகுதியுந் தழைத்திட வருளாற்
பார்த்து முன்னர் வந்தடைந் திடும்படர் பெருந்துயர்
நீத்து ளங்களிப் பெய்திட வரம்பல நேர்ந்து. ௪௬

மத்த மானிடக் கோளரி வதனமுந் தோளுங்
கைத்த லத்திடைக் கொண்டிரு விசும்பிடை(க்) கரந்தான்
தத்து வங்கடந் தொளிர்பவன் சரபமாம் வடிவன்
வித்த கன்கரு ணாகர வீரபத் திரனே ! ௪௭

மறைந்து சென்றரு ளெப்பிலா வீரனு மறைநூ
லறைந்த வெள்ளியம் பொருப்பிடத் தடைந்திறை யருளைத்
துறந்த மானிட மடங்கலின் வதனமுந் தோலுஞ்
சிறந்து நல்கின னகிலநா யகன்றிருக் கரத்தில். ௪௮

வீர னற்புத மேனியிற் பரவொளி விசும்பு
பார ளித்தருள் பரனிடைப் பாலொடு பால்போ
னீரி டத்துணீ ரடைதல்போ னெய்யுறு நெய்போ
லார வுற்றதா லண்ணறன் பெருமையா ரறிவார். ௪௯

அற்றை நாண்முத லரியத ளாடையாய்ச் சாத்தச்
செற்று மாய்த்தவத் திறனர மட(ங்)கலா னனத்தை
முற்று நான்முகர் தலைசெறி முத்தமா லிகையிற்
பற்று நாயக மணியெனப் புனைந்தனன் பரமன். ௩௰

காவல் கொண்டமால் முத(ல்து)யர் படுமது கண்டும்
யாவ ரும்பர னேவலென் றிருக்குரைத் திடவு
மூவர் தங்களி லொருவனே முளைப்பிறை (ெ)மௌலித்
தேவர் தேவென வுரைப்பதே சிற்சில (மறை)யோர். ௩௧

மதிநி லாமுடிக் கணுதிபன் வான்மறைந் ததற்பி
னதிப யந்தவிர்ந் தடைவுறு மகிழ்ச்சியி னடைந்து
புதுமை கொண்டவிக் காட்சியை(ப் போ)ற்றினர் தந்தம்
பதியி னெய்தினர் பதுமனே முதலிய யிமையோர். ௩௨

சைவ மாதவர் சைவநா யகன்றனை யன்றித்
தெய்வம் வேறிலை யெனவுணர் திறற்றனி வீரர்
மெய்வரு (வீ)ரச் சரபமாந் திருவுரு விளக்கங்
கைவ ரும்படிக் கேட்கவுங் கருதவும் படுமால். ௩௩

அப்பெருந் தகையவர் கணமுன் னருள்திரு மறைநூல்
செப்பரும் பொருளா யுலகத் [1] தினிற்(ற)ந்துமுன் னோங்க
வொப்பி கந்தவிப் புராணநூ லுரைத்திட லுரித்தா
லிப்பெ ருங்கதை செவிப்புலத் தேற்கமுன் கேட்கில். ௩௪

மண்டு வெஞ்சின மடங்கலே யாதியா ம(ண்ட)
சண்ட வாயுவா லிடியினுல் மழையினுற் றழலாற்
கொண்ட வெம்பிணித் தொகுதியாற் கனவினுற் குறியால்
விண்ட சோரரால் வருவினை மெ(ன்)மே(ல்) மேவா. ௩௫

ஆற்றெ ணுதவெந் துயர்பகை யரிதரு மாயங்
கூற்ற நண்ணிடா கோள்வினை யடைந்திடா முன்ன
மேற்ற தீவினை யடைந்திடா மேல்வினை யேறுச்
சாற்ற ரும்பிறப் பிறப்புவென் னரகமுஞ் [2] சாரா. ௩௬

தொக்க விக்கினந் துஞ்சுமா பஞ்சபா தகங்க
ளக்க ணத்திடை யழியுநீ டவமிருத் தகலு
மிக்க தேவர்க ளுண்மைகள் விளங்கும்வே தாந்த
தக்க சைவசித் தாந்தமா முத்தியுஞ் சாரும். ௩௭

1. அசைமிகுதி. 2. சாரார் என்றுளது.

தரும மாதவம் புகழறி வொளிதமர் புதல்வர்
பெருகு ஞானமுஞ் சாந்தமும் போகமும் பெருகு
மருவி யட்டமி சதுத்தெசி மகச்சிவ [1] பிதிட்டை
திருவி ழாவினி லிறைமிகத் திருவருள் புரியும். ௯அ

பாடு மின்னிசைச் சதுமறை யிடத்துறப் பார்க்கு
நாடு மந்திர மாகுமின் னுமநூற் றெட்டு
மீட ரும்பகைச் சாதியின் வீழ்ந்திடா தெடுத்துத்
தேட ருஞ்சிவ நெறிப்பெருங் கரையிடைச் சேர்க்கும். ௯௯

தத்த மெண்ணிய வெண்ணிய சார்ந்திடு மெலர்க்குஞ்
சித்தி யெய்திடும் பொய்த்திறஞ் சிந்திடு மாறு
நித்த மாகிய சத்தியம் புணர்ந்திடு நிகரில்
வித்த கந்தரும் பலந்தனை விளம்புதற் கெளிதோ ! ௧0

சந்தி வந்தனை முதலுயர் நித்தியந் தழல்கள்
நந்து வேள்வியே யாதிநை மித்திய நலங்க
ளுந்து மங்கவை குறையினுங் குறைவெலா மொழித்து
மிந்த நாமநூற் றெட்டையு மினிதுற வியம்பின். ௧௧

கூறு மானிட மடங்கலின் வலியுகக் குறைத்த
மாறி (லா)வருட் சரபநா யகன்றனை மகிழ்வா
லாறு திங்களன் பெய்திய வறிவொடா தரித்தாற்
பேறு வேண்டுவ வேண்டுவார் பெறுவது திண்ணம். ௧௨

வேறு

நிறைதிகழ் பரமனரு ளாகமமு
மெழுத்தஞ்சும் நீறும் வாழ்க
மறைநெறியு மகச்சடங்கு மறையவரு
மழைமுகிலும் வளர்க நீதி
பொறைமரு(வு காவ)லனுஞ் செங்கோலும்
பொங்கோதப் புவிமே லோங்கப்
பிறைமவுலி யமலனடி யார்கணமு
மருந்தவமும் பெருக வன்றே ! ௧௩

---

1. = ?

வேறு

இக்கதையை விரும்பினர்கள் கேட்டவர்க ளிசைத்தவர்க
டக்கசிவ லோகத்திற் றங்கிமகிழ்ந் திறைவனுட
னெக்கவுறைந் தவனுடைய வுருவமும்பெற் றழியாத
மிக்கபரி பூரணத்தி னீங்காமல விளங்குவார்கள்.

நரசிங்க வதைச் சருக்கம் முற்றும்.

ஆகத் திருவிருத்தம் 431.

சரபபுராணம் முற்றும்

“தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி!”

கவீந்திர பரமானந்தர் இயற்றிய

சிவ பாரத சரித்திரம்

(தமிழ் ஆக்கம்)

பதிப்பாசிரியர்:
தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையத் துணை நூலகர்,
ம. சிராவன்.

தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலைய நிர்வாகக்குழுவுக்காக
கௌரவக் காரியதரிசி,
திரு நீ. கந்தசாமிப் பிள்ளை அவர்களால்
வெளியிடப்பட்டது.

ஸ்ரீ வாணீ விலாஸ அச்சகம், ஸ்ரீரங்கம்.

கி. பி. 1972] [விலை ரூ. 1—50.

PREFACE

The present publication is a rendering in popular and often colloquial Tamil prose, of *Sivabharata Charitram,* the story of the famous Shivaji the Great, founder of the Maratha dynasty. The author of the original work himself gives the reasons for calling it *Sivabharata Charitram,* though it is the story of a single hero. The historical accounts of Shivaji are as vast as Mahabharata itself. Further he holds that a study of the stories will expel the sins of the readers as Mahabharata does. The author attributes the origin of this work to the divine inspiration and grace got from the Goddess Ekavira devi In those days parts of *Bharatakhandam* was experiencing a critical situation by the attack of Muslim rulers. At that stage Shivaji the Great, arrested their advance, won victories over them and established the Maratha Empire.

The author at the outset has enumerated the important points expounded in this *Sivabharata Charitram:* like the glories of Sambo Mahadeva, the supremacy of Tulaja Devi, the description of the four eternal and everlasting values known as Dharma, Artha, Kama and Moksha, details about holy places accounts of the wars with the Muslims, the circumstances leading to the birth of Shivaji for suppressing the Muslim marauders, characteristics of horses and elephants, details about forts and forces, rules of conduct for Kings, and the stories about the Kings of the Solar dynasty.

The name of the author of the original Sanskrit work is *Paramananda Kavindra.* He is also mentioned as Paramananda Sarma. This Brahmin poet, son of Govinda Bhattar, lived in Kasi for many years and it was during his stay here that he happened to write this work.

In the Tamil section of this Library there is a single manuscript of this work (D. 630/M. 214). In several places the detailed description in the original are omitted, while the narrative portion follows the original Sanskrit version closely. No mention has been

made in the colophon about the person who copied the original manuscripts or the year in which the copy was made as is usually found in many manuscripts. In the Sanskrit section of this Library there are four manuscripts (D. No. 4223-4226) of the original Sivabharatam in Sanskrit. The Bharat Samsodhak Mahamandal Poona, has published in 1927, for the first time this work with a commentary and elaborate introduction in Marathi In 1930, the Sanskrit original only was published in the Anandashrama Sanskrit Series, Poona. It is the unique privilege of the Sarasvati Mahal Library to preserve the manuscripts of both the Sanskrit original and Tamil translation of this work. It is understood that the Tamil translation of Sivabharatam was written during the reign of King Serfoji I (A. D. 1712-28).

The original Sanskrit poem is composed in a grand and classical style, whereas the Tamil version is in very simple and colloquial language. In the Tamil manuscript, there is no division into chapters beyond the second and no division into paragaphs at all. But to facilitate the understanding of the readers, this publication is divided into 32 chapters, based on the division made in the Sanskrit original The division into paragraphs is based on the sequence of ideas.

Regarding the Linguistic point of view, the Tamil narrative is given exactly as it is found in the manuscript without altering anything except scriptorial errors, as it will be useful for scholars of Linguistics who work on the evolution of Tamil language in those countries. In some places, the necessary Tamil meanings are given in the footnotes. The words which are probable in the blanks in the manuscript caused by insects are suggested within brackets.

It is my duty to express my gratitude to the Honorary Secretary, Thiru N. Kandaswamy Pillai for his permission to publish this work and to the Librarian, Thiru V. Gopala Iyengar, M. A., for the help rendered by him in the comparison of the work with the Sanskrit original. I am also thankful to Thiru T. R. Bhima Rao, Marathi Pandit for his assistance in making out the Marathi translation in the printed edition.

I consider the editing of this small historical piece in Tamil as a special privilege extended to me. I hope that this small publication will evoke a good response among scholars so that a detailed and critical edition of this work in book form may be possible soon.

Thanjavur
8-6-1972

M. SEERALAN,
Assistant Librarian,
T. M. S. S. M Library.

முன்னுரை

'சிவபாரத சரித்திரம்' என்றவுடன் நம் யாவருக்கும் நினைவில் நிற்பது சிவனைப்பற்றிய கதைத் தொகுப்பே. ஆனால் அவ்விதமில்லாமல் இந்நூலின் தலைப்பு சிந்தனைக்கு விருந்தாக அமைந்துள்ளது. இத் தலைப்பு சிவாஜி, பாரதம், சரித்திரம் என்று மூன்று சொற்களைக் கொண்டு அமைக்கப்பெற்றுள்ளது. சிவாஜி என்ற சொல்லின் சுருக்கம் சிவ என்பது. மராத்திய சாம்ராஜ்யத்தை நிறுவிப் புகழ்கொண்ட ஆதி சிவாஜியின் சரித்திர நிகழ்ச்சிகளைக் கூறுவது இந் நூல். இதற்கு ஏன் பாரத சரித்திரம் என்று பெயரிடநேர்ந்தது என்பதற்கு நூலாசிரியர், சிவாஜியின் வரலாற்று நிகழ்ச்சிகள் பாரதக் கதைபோல் பரந்து பட்டுள்ளது என்றும், அவை அந்த இதிகாச நூலைப்போல் பாபத்தைப் போக்கும் தன்மைவாய்ந்தது என்றும் கூறுகிறார். மேலும் இந்தச் சரித்திரம் ஏகவீராதேவி மகிமையால் விளைந்ததாகவும் கூறி இந்நூலுக்கு தெய்வீகத்தன்மை யூட்டுகிறார். வரலாற்று நிலையில் 'பாரதம்' என்ற பெயரில் ஒரு நாடு இல்லாமல் அழிந்து படுமோ என்று அஞ்சி, பாரதம் என்றும் நிலைத்திருக்கும் வண்ணம் அந்நிய ஆதிக்கத்தை அடக்கி ஒடுக்கி புதிய சாம்ராஜ்யம் படைத்துப் பெருமைகொண்ட ஒருவரின் சரித்திர நூலாகையால் பாரதம் என்று பெயர்கொண்டது போலும்.

இந்நூலின்கண் விரித்துரைக்கப்பெற்றுள்ள செய்திகள் பல. அவற்றின் தொகுப் பொன்றை ஆசிரியர் தந்துள்ளார். சம்போமகாதேவருடைய மகிமையும், துளஜா தேவி அம்மனுடைய மகிமையும், தர்மார்த்தகாம மோக்ஷங்களுடைய மகிமையும், தீர்த்தங்களுடைய மகிமையும், துலுக்கர்களோடு யுத்தம் பண்ணினதும், அந்தத் துலுக்கரை நாசம் பண்ணுவதற்கு இவர் ஜென்மமெடுத்ததும், பல ராஜாக்களுடைய சரித்திரங்களும், யானை குதிரைகளுடைய இலட்சணங்களும், கோட்டைக் கொத்தளங்களுடைய இலட்சணங்களும், ராஜாக்களுடைய நீதி முறைகளும், சூரியவம்சத்திலே உதித்தவர்களுடைய கதைகளும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

இந்நூலாசிரியர் பரமானந்தர் என்றும் கவீந்திரர் என்றும் அழைக்கப் படுகிறார். பிராமண குலத்துதித்த இவர் பரமானந்த கவீந்திரர் என்றும் பரமானந்த சர்மா என்றும் குறிக்கப்பட்டுள்ளார். இவருடைய தந்தையார் பெயர் கோவிந்தபட்டர். இவர் தீர்த்த யாத்திரைக்கு காசிக்கு வந்து வெகுகாலம் அங்கு தங்கியிருக்கையில் இந்நூல் வடமொழியில் செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

மகாலின் தமிழ்ச் சுவடிகளின் பிரிவில் D 630/M 214 என்ற எண்ணுள்ள இந்த ஒரே பிரதிமட்டும் உள்ளது. இந்நூலில் பிராமணர்களுக்கிடையே வழங்கி வரும் மொழி வழக்கு அப்படியே கையாளப்பட்டுள்ளது. வடமொழி மூலத்தை

மொழிபெயர்த்துள்ள ஆசிரியர் சிற்சில இடங்களில் சுருக்கமான விவரங்களை மட்டுமே தமிழில் தந்துள்ளார். மேலும் சுவடிகளின் ஈற்றில் வழக்கமாகக் காணப் படும்படியெழுதியவர் விபரமோ, காலக் குறிப்புகளோ, இதர விபரங்களோ ஏதும் காணப்படவில்லை. நூலகத்தின் வடமொழிப் பிரிவில் இப்பெயருடைய நான்கு சுவடிகள் (D Nos. 4223-4226) உள்ளன. இவற்றை ஆராய்ந்து 1927 ஆம் ஆண்டில் புனுவிலுள்ள பாரத இதிகாச சம்சோதக் மண்டல ஆய்வுக் கூடத்தினர் வடமொழி மூலமும், மராத்தி உரையும் கண்டு வெளியிட்டுள்ளனர். 1980 ஆம் ஆண்டில் புனு ஆனந்தாச்ரம அச்சகத்தார்கள் 'சிவபாரதம்' என்ற தலைப்பில் வடமொழி மூலம் மட்டும் கொண்ட ஒரு நூலை வெளியிட்டுள்ளனர். இருப்பினும் வடமொழிச் சுவடியும், தமிழ்மொழி பெயர்ப்புச் சுவடியும் நம் நூலகத்தில் மட்டுமே உள்ளன. இது மிகவும் போற்றுதற்குரிய செய்தியாகும். தஞ்சையில் ஆட்சிபுரிந்த முதலாம் சரபோஜி காலத்தில் (கி. பி. 1712-1728) இத்தமிழாக்கம் இயற்றப்பட்டதாகத் தெரியவருகிறது. ஆதலின் முதன் முறையாக இந்நூல் சரசுவதிமகால் நூலகத்தால் வெளியிடப்படுவது சாலவும் பொருத்த முடையதாகும்.

அடுத்து மொழி நடைபற்றியும், பிற விபரங்கள் பற்றியும் கூறவேண்டுவது இன்றியமையாததாகிறது. சுவடி பிழை மலிந்து காணப்படுகிறது. மொழிநடை மிகவும் சாதாரணம். உரையாடல் பாங்கில் அமைந்த இந்நூல் தொடர்ந்த நெடும் வாக்கியங்கள் பலவற்றைக் கொண்டுள்ளது. ஆகையால் சில இடங்களில் பத்திபிரித்தல் சிரமமாக இருந்தது. இந்நூல் 32 அத்தியாயங்களைக் கொண்டது. கடைசி அத்தியாயம் மிகவும் சுருக்கமாக உள்ளது. அத்தியாயத் தலைப்பு இரண்டாம் அத்தியாயம் வரைதான் தமிழ்ச் சுவடியில் கொடுக்கப்பட்டுள்ளது. உரை நடை வகையிலுள்ள இந்நூலைப் படிப்பவர் தளர்ச்சியுறுவண்ணம், அத்தியாயம் பிரித்துத் தருவது உதவியாயிருக்குமெனக் கருதி வடமொழி மூலத்தை ஒப்பு நோக்கி அத்தியாயம் பிரித்துள்ளேன். புத்தகத்தின் மொழி நடையை மாற்றாமல், வருங்கால மொழி நூல் ஆய்வாளருக்கு உதவும் வகையில் அப்படியே பதித்துள்ளேன். வடமொழிச் சுலோகங்கள் வில்லிபாரதத்தையொத்த அளவில் எடுப்பாக உயரிய நடையிலும் மிகவும் சுவையுடனும் அமைக்கப் பெற்றுள்ளன. ஆனால் தமிழில் அனைத்துச் சுவையையும் உரை நடையில் காட்டமுடியவில்லை. சிற்சில இடங்களில் சுருங்கிய அளவில் வருணனைகளும் செய்திகளும் விபரங்களும் தரப்பெற்றுள்ளன. ஆங்காங்கே தேவையானச் சொற் களுக்கு பொருள் விளக்கமும் சுவடியில் பூச்சியரித்த இடங்களில் இருக்கவேண்டிய சொற்களை அடைப்புக் குறியிலும் தந்துள்ளேன்.

இந்நூல் வெளிவர அனுமதி வழங்கி ஆதரவு காட்டிய தமிழ் முதறிஞர் கௌரவக் காரியதரிசி, உயர்திரு நீ. கந்தசாமிப்பிள்ளை அவர்கட்கும் வடமொழிச் சொற்களில் எனக்கு ஏற்பட்ட ஐயப்பாடுகளை அவ்வப்போது அகற்றியும்,

ஊக்கமூட்டியும் உறுதுணையாயிருந்தும் வந்த நூலகர், திரு. வே. கோபால அய்யங்கார். M. A., அவர்கட்கும் என் மனமார்ந்த நன்றி என்றும் உரித்தாகும். மேலும் இந்நூலின் சிற்சில இடங்களை மராத்தி மொழிபெயர்ப்பு அச்சு நூலோடு ஒப்பு நோக்க உதவிய மராத்தி பண்டிதர், திரு. T. R. பீமராவ் அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகும்.

மேலும் இவ்வரிய வரலாற்றுச் சிறு நூல் ஒன்றை பதிப்பித்து, தமிழன்னைக்கு அணிவிக்கும் பேறு கிட்டியமைக்கு பெருமிதம் கொள்கிறேன். வாசக அன்பர்கள் தக்க உற்சாகமூட்டுவார்களேயானல் இந்நூல் ஒரு விரிவான ஆராய்ச்சி நூலாக வெளிவரும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. குணம் நாடிக் குற்றங்களைந்து யாவரும் பயன் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

தஞ்சாவூர்,
28—5—1972

ம. சீராளன்,
துணை நூலகர்,
சரசுவதி மகால் நூலகம்.

இருபத்தைந்தாம் அத்தியாயம்

அதன் பிறகு ஓடிப்போகிறவரை பின் தொடர்ந்து அடிக்கவேண்டாமென்று சிவாஜி ராஜா சொன்னர். அந்த ரெணகளத்திலே செத்துப்போனவர்களுடைய ஆபரணங்களினுலேயும் வஸ்திரங்களினுலேயும் அந்த பூமி நிறைந்தது. இப்படிப் பட்ட யுத்தமாகி மடிந்துபோனவர் போக எதிரியினுடைய பாளேயத்திலே மிஞ்சின பேர் ஓடிப்போன பிறகு அந்த தேசந்திலே சிறிது ஜனத்தை [1] டாணேயம் வைத்து தான் ஜெயபேரிகை அடித்துக்கொண்டு நாலு திக்கும் பிரகாசம் பண்ணிக்கொண்டு இன்னும் அல்லீஷாவினுடைய தேசத்தைக் கட்டவேண்டி சிறிது சர்தார் கூட்டங் களுக்கு சேனேகளேக் கொடுத்தனுப்பிவைதது சிவாஜி ராஜா தான் பனளா கெடிக்குப் போகவேண்டுமென்று பிரஸ்த்தானம் பண்ணினர்.

அதன் பிறகு சிவாஜி ராஜா சேனதிபதி சேனேயோடு போய் எதிலிஷா வினுடைய தேசத்தை யெல்லாங்கட்டி கோட்டைகள் துருக்கங்கள் கெடிக ளெல்லாம் சுவாதீனம் பண்ணிக்கொண்டான். அதன் பிறகு மொகல் வெகு நாளாய் வராமலிருந்ததினுலே ஓடிப்போன ருஸ்துமகான், பாசில்கான் இவர்கள் இரண்டுபேரும் வெகுவிசனத்தோடு அல்லிகரன் புரத்திற்கு எஜமானனுயிருக்கப் பட்ட சோஅற்கான், பர்பர்கான் இவர்கள் இரண்டுபேரையும் அழைத்து சிவாஜி ராஜாவை நிக்கிரஹம் பண்ணுங்கள் என்று சொல்லி அவர்களே அனுப்பிவைத்து தான் திரும்பி சிறிது சேனேகள் சேகரித்துக்கொண்டு பனளா கெடிக்கு வந்தான்.

சாதாத்துகான், பாசிராசுகான், கோர்ப்படேகான், பீடனுயக்கன், பாயிகான் மதூதுகான் இவர்களெல்லோரும் தங்கள் தங்கள் தளத்தோடு சோஅற்கானுக்கு சகாயமாய் வந்து பனளாகெடிக்கு கீழண்டேயும் மேல்பக்கத்திலேயும் தென் பாரி சத்திலேயும் வடபாரிசத்திலேயும் இப்படி நாலுபக்கத்திலேயும் முற்றுகையிட்டார் கள். சிவாஜிராஜாவுக்கும் அந்த சோஅற்கானுக்கும் பாரத யுத்தம் போலே சண்டை யாயிற்று. அதிலே பர்பர்கான் என்கிறவன் விழுந்து போனுன். சிவாஜிராஜா நாளுக்கு நாள் அதிகமாய் விருத்தி யடைவதைப்பார்த்து சகிக்கப்படாமல் டில்லீ சுரன் அருகில் போய் தனக்கு சகாயமாய் சிறிது சேனேகொடுக்கவேண்டுமென்று அல்லீஷா கேட்டான்.

அதற்கு டில்லீசுரனும் தாரா கெடியிலேயிருக்கப்பட்ட சர்தார்களேயும் சேனேயும் அல்லீஷாவுக்கு சகாயமாய் போகச்சொல்லி அனுப்பி வைத்தான். டில்லீசுரனுடைய உத்தாரப்படிக்கு சர்ஸ்தாகான் சேனேயோடு புறப்பட்டு சிவாஜி ராஜாவினுடைய தேசத்திலே வந்து தேவாலயங்கள் பெரியவர்களாயிருக்கப்பட்ட சந்நியாசிகளுடைய மடங்களும் காவேரி நதி தீரத்திலே யிருக்கப்பட்ட பிராமணர் களுடைய அக்கிரஹாரங்களும் வனங்களும் சிங்காரத் தோட்டங்களும் இவற்றை யெல்லாம் தும்சம் பண்ணிக்கொண்டு வந்தான்.

---

1. 'காவல்' என்ற பொருளில் வந்துள்ளது.

பின்பு அல்லீஷாவினுடைய உத்தரவுப்படி சோ அற்கானும் சாகசவடம் என்கிறதை கொள்ளையடித்துப் புற பட்டணத்தை வாங்கிக்கொண்டான். கோலாரையும் ஆக்ரமித்துக்கொண்டு சக்கிராபதி நகரத்துக்கு வந்து அதுவும் சுற்றிக்கொண்டு அங்கேயிருக்கிற ஜனங்களையும் காபிரிப்படுத்தி கொள்ளையடித்துக் கொண்டு சிவாஜி ராஜா பனாளா கெடியிலே இருக்கிறவரை சுற்றிக்கொணடான்.

இருபத்தாறும் அத்தியாயம்

அப்போது சிவாஜி ராஜா வெகு கோபத்துடனே சோ அற்கானுடனே யுத்தம் பண்ணிக்கொண்டிருக்கும்போது சிவாஜிராஜாவினுடைய தாயார் மகா பதிவிரதையாயிருக்கப்பட்டவள் ராஜகிரி என்ற துருக்கத்திலேயிருந்தவள் யுத்தம் பண்ணுவதிலே உற்சாகமாய் ஆங்காரத்தினாலே தன்னுடைய கெடிகள் துருக்கங்களெல்லாம் வெகு பந்தோபஸ்து பண்ணினாள். அப்போது நேதா என்கிற சேனாபதி, இலால்கான் இவர்கள் இரண்டுபேரும் சிவாஜிராஜாவினுடைய உத்தரவுமேல் சரபுரத்துக்குப்போய் அங்கிருக்கும் சத்துருக்களை ஜெயித்து அந்த சரபுரம் சுட்டுக் கொள்ளையடித்துக்கொண்டு ராஜகிரிக்கு வந்துசேர்ந்தார்கள். அந்த அம்மாள் தன்னுடைய மகன் சிவாஜிராஜாவைப் பார்க்கவேண்டுமென்று வெகு ஆசையோடு சத்துருக்களையும் சிட்சிக்கவேண்டுமென்று வெகு கோபத்தினாலே தன் சேனையுடனே பனாளா கெடிக்குப் போகவேண்டுமென்று ஆயத்தப் பட்டுக்கொண்டிருக்கும்போது நேதா என்கிற சேனாபதியும் இலாலுகானும் அந்த அம்மாளிடம் வந்து நமஸ்காரம் பண்ணிக் கைகட்டிக்கொண்டு நின்றார்கள்.

அவர்களைப் பார்த்து அந்த அம்மாள் சொன்னது, என்னுடைய வெளிப் பிராணனாயிருக்கப்பட்ட சிவாஜிராஜா பனாளா கெடியிலே இருக்கிறவனை சத்துருக்கள் வந்து சுற்றிக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட எஜமானனை விட்டுவிட்டு வெட்கமில்லாமல் சத்துருபயத்தினாலே இங்கே ஓடிவந்தீர்களா என்று சொல்லி, நல்லது என்னுடைய பிள்ளையை நான்தான் விடுவிக்கிறேனென்று எத்தனம் பண்ணி அந்த சோ அற்கானனுடைய சிரசை அறுத்துக் கீழே தள்ளு கிறேன். என்னுடைய குழந்தையைப் பாராமலிருக்கமாட்டேன். மகாவிஷ்ணு வினுடைய அம்சமாயிருக்கப்பட்ட சிம்மம்போலே சூரனாயிருக்கப்பட்ட பிள்ளையை இங்கே அழைத்துக்கொண்டு வருகிறேன். இனிமேல் குழந்தையைப் பாராமல் என்னுடைய பிராணன் நிற்கமாட்டாது என்று சொல்லி நீங்கள் இங்கேயிருந்து கொண்டு இந்த ராஜகிரியை காப்பாற்றிக்கொண்டிருங்கள். நான்போய் சோஅற்கானனுடனே யுத்தம் பண்ணுகிறேன் என்று சொன்னாள்.

அப்போது அந்த சேனாதிபதி பயந்துகொண்டு விசனமாயிருக்கப்பட்ட அம்மாளைப் பார்த்துச் சொன்னது, மகாபாகுசாலியாய் சூரனாய் இந்த பூமி யெல்லாங் காப்பாற்றுகிறவராயிருக்கப்பட்ட ராஜா இதராளுடைய சகாயத்தை

அபேட்சிக்கிறதில்லை. ஆகையினால் அவருடைய உத்தரவுப்படி விசாபுரத்தை ஜெயித்து மொகலனோடு யுத்தம் பண்ணுவதற்காக நாங்களிங்கே வந்தோம். நீர் இங்கே தானே இரும். அங்கே போகவேண்டாம். அங்கே ராஜா பயமில்லாம லிருக்கிறார். என்னுடைய மனதிலேயும் ராஜாவைப் பார்க்கவேண்டும். சத்துருவோடு யுத்தம் பண்ணவேண்டும். அந்த சோ அற்கானனை நான் போய் அடிக்கிறேன். இவ்விடமுள்ள கெடிகள் துருக்கங்களெல்லாம் ஜனங்கள் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள். சத்துருக்களினாலே இந்தக் கெடியை வாங்கமுடியாது என்று இந்தப் பிரகாரமாய் சொல்லி அந்த சேனாதிபதி சேனையை வாங்கிக் கொண்டு அதிவேகமாய் பனாளா கெடிக்குப் போகவேணுமென்று புறப்பட்டான்.

சிவாஜிராஜாவுக்கு மேற்பலனாய் சேனையோடு இந்த சேனாபதி வருகிற செய்தியை சோஅற்கான் கேட்டு அவர்களை மறிப்பதற்கு சிறிதுபேரை அனுப்பி வைத்தான். அவர்கள் வழியிலே வந்து இவர்களை மறித்துக்கொண்டு சண்டையாயிற்று. கத்திகளினாலே தலையை அறுத்துக் கீழே தள்ளத் தலைப்பட்டார்கள். குந்தாயுதத்தினாலே கைகளை அறுக்கத் தலைப்பட்டார்கள். அப்போது இலாலுகானுடைய பிள்ளை குதிரையிலேறி சத்துருக்களுடைய சேனையிலே பிரவேசித்து குதிரையை சுற்றவிட்டு வெகுபேரை அடித்தான். அவர்களும் வெகுபேராய் வந்து இவனை குதிரைமேலிருந்து கீழே தள்ளி பரிச்சியினாலே குத்தி அவனைக் கைப்பிடியாய் பிடித்து தூக்கிக்கொண்டுபோனார்கள். அப்போது இலாலுகான் தன் பிள்ளையைக் கொண்டுபோவதைப் பார்த்தும் அவனை விடுவிப்பதற்கு இவனாலே ஆகாமல்போய்விட்டது. இந்த இலாலுகான் ஓடிப்போக தக்கனையாய் சோஅற்கானனுடைய ஜனங்கள் வந்து அடித்தார்கள். இலாலுகானனுடைய பிள்ளை எதிரி கையில் அகப்பட்டானென்கிற செய்தி கேட்டு வெகு விசனத்தோடு ஆக்கிரகப்பட்டுக்கொண்டு யுத்தம் பண்ணினாலும் பனாளா கெடிக்குப் போவதற்கு வழியில்லாமல்போய்விட்டது.

இந்த சேதி சிவாஜிராஜா கேட்டு வெகு கோபத்திலேயிருக்கும்போது ஒரு ராத்திரி சிவாஜிராஜா படுத்துக்கொண்டிருக்கும்போது துளஜா அம்மனை சொப்பனத்திலே கண்டார். அம்மனை சாஷ்டாங்கமாய் சேவித்தார். அப்போது ராஜாவைப் பார்த்து அம்மன் சொன்னது. இந்த சக்கிராவதி நகரத்தை மொகலாள் ஜெயித்து வாங்கினபடியினாலே இனிமேல் நீ இங்கேயிருக்கக்கூடாது. இப்போது அவர்களுக்கு ஜெயகாலமிருக்கிறது. சக்கிராவதி நகரம் வாங்கினது அவர்களுக்கு நாசகாலமேயல்லாமல் வேறேயில்லை. தூண்டியிலே இருக்கிற இரைக்கு ஆசைப்பட்டு மீன் எப்படி வந்து அகப்பட்டுக்கொள்ளுமோ அப்படி இந்த சக்கிராவதியை வாங்கியதாலே அகப்பட்டுக்கொண்டானென்று எண்ணிக்கொள். நீ விரைவில் ராஜகிரி போய் உன்னுடைய தாயார் பதிவிரதையாயிருக்கப் பட்டவள் வெகு விசனத்தோடு இருக்கிறாள். அவளுடைய பேட்டி வாங்கிக் கொண்டு உன்னுடைய ராஜ்யத்தை பரிபாலனம் பண்ணிக்கொண்டிரு. போகும்

போது சிறிது ஜனங்களை அழைத்துக்கொண்டுபோ. இந்தக் கெடியிலே சிறிது ஜனங்களை வைத்து அவர்கள் இந்த சோஅற்கானனேடு யுத்தம் பண்ணிக் கொண்டிருக்கட்டும். நான் அந்த சோஅற்கானனை மலைக்கப் பண்ணுவிக்கிறேன். ஒரு காரணத்தினுலே இவனுக்கு [1] மிரித்தியு வரவிருக்கிறது என்று இவ்விதம் ராஜாவுக்குச் சொல்லி அந்தர்தியானமாய்போய்விட்டாள்.

அதன்பிறகு சத்துருக்களினுலே சுற்றிக்கொண்டிருக்கிற இந்த பஞளா கெடியிலிருந்து போகவேண்டுமென்று யோசனை பண்ணிக்கொண்டு சமர்த்தர்களாயிருக்கப்பட்ட சர்தார்களை அந்தக்கெடியிலே வைத்து திரும்பக பாஸ்கரன் என்னும் பிராமண சர்தாரை அழைத்து நீ மகாசூரனயிருக்கிறுய். இந்தக் கெடியிலிருந்துகொண்டு சத்துருக்களோடு யுத்தம் பண்ணிக்கொண்டிரு. இந்தத் துருக்கத்தைச் சுற்றிலும் இருக்கப்பட்ட காடு ஆகாசம் கூட தெரியாமல் வெகு நெருக்கமாயிருக்கப்பட்ட காடு. மலையிலேயிருக்கிற சுனைகளுடைய தண்ணீர் எந்நேரமும் பெருகியோடி பாசி படர்ந்து சேறும் தண்ணீருமாயிருக்கிறது. இப்படிப் பட்ட கெடியை சத்துருக்களினுலே வாங்கக்கூடாது. நாமும் நாலு மாதமாயிங்கே யிருந்து சத்துருக்களோடு யுத்தம் பண்ணினேம், சத்துருவை ஜெயிப்பதற்கு ஆகாமல் போய்விட்டது. இப்போது ஆவணி மாதம் பிறந்தது. இனிமேல் மழை நாளானபடியினுலே சத்துருவுக்கு இந்தக்கெடியை வாங்கக்கூடாது.

இதல்லாமல் நம்முடைய சேனுபதி நேதா என்கிறவன் சேனையோடு வந்தவன்கூட வழியிலே வரவிடாமல் சத்துருக்களினுலே அபஜெயப்பட்டான். இந்த சத்துருக்கள் போட்ட முற்றுகை ஒருவராலேயும் வெல்லமுடியவில்லை. சோஅற்கான் வெகு சூரன், வெகு தளத்தோடு வந்துள்ளான். இப்போது இவனேடு போராடக்கூடாது. இதுதவிர புனு பிராந்தியத்திலே மொகலனுடைய சேனை வந்து சுற்றிக்கொண்டிருக்கிறது. ஆகையினுல் நான் இங்கே இருப்பது யுக்தமல்ல. அந்த மொகலனை அடிப்பதற்கு என்னைத் தவிர மற்று ஒருவராலும் ஆகாது. ஆகவே அவர்களை அடிக்கிற நிமித்தியம் நான் சீக்கிரமாய் போகிறேன். உன்போலே சூரனுயிந்த கெடிகளிலிருக்கிற போது ஒருவராலே இந்தக் கெடியை வாங்கக் கூடுமா. ஆகையினுல் இந்தக் கெடியிலே நீ சர்தாராயிருந்து கெடியை ரெட்சித்துக் கொண்டிரு. அருச்சுனன் எப்படி (சத்துருவ்யூஹ) த்தைப் பேதிச்சுக் கொண்டு போவானே அப்படி நான் இந்த சத்துருக்களை பேதிச்சுக்கொண்டு போகிறேன். என் முன்னே ஒருவரும் நிற்கமாட்டார்கள் என்று இவ்விதம் திரும்பக பாஸ்கரருக்குச் சொல்லி அந்தக்கெடியிலே வைத்துவிட்டு தான் குதிரை யிலேறி சமர்த்தர்களாயிருக்கப்பட்ட காலாட்கள் அறுநூறு பேரை அழைத்துக் கொண்டு ராத்திரி சாமத்துக்குமேல் கூச்சு நகாரா அடித்தார்கள்.

---

1. மரணம்.

அந்த சப்தம் சத்துருக்கள் கேட்டார்கள். அவர்களுக்கு மேக கர்ஜனை போல் தோன்றிற்று. மேகங்களும் வந்து கப்மிக்கொண்டு மின்னலும் மின்னுகிற படியினாலே ராஜாவுக்கு மேடு பள்ளங்கள் தெரிந்து நடப்பதற்கு அனுகூலமாயிற்று. சமீபமாயிருக்கப்பட்ட வழியிலே ராஜா புறப்பட்டு நடந்தார். துளஜாதேவி அம்மனுடைய கடாக்ஷத்தினாலே சிவாஜிராஜா போகும் சேதி தெரியாமல் சத்துருக்கள் பிரமித்துப்போயிருந்தார்கள். ராஜாவும் தன் ஜனத்தோடு வெகு கடினமாயிருக்கப்பட்ட வழியைத் தாண்டிக்கொண்டு ஜனங்கள் சஞ்சாரமில்லாத வழியோடு தன்னுடைய விசால் கெடிக்குப் போய்ச்சேர்ந்தார்.

இருபத்தி ஏழாம் அத்தியாயம்

முன்னே பனாளா கெடியிலேயிருந்து ராஜா புறப்படும்போது சோஅற்கானுக்குச் சொல்லி அனுப்பினது, அலீஷாவினுடைய சேனை புனா பிராந்தியம் வந்து சுற்றிக்கொண்டிருக்கிறது. எனக்கு அங்கே போகவேண்டியிருக்கிறது. இந்தக் கெடியிலே நம்முடைய சர்தாரோடு யுத்தம் பண்ணிக்கொண்டிரு. இல்லாவிட்டால் நம்மோடுதானே யுத்தம் பண்ணவேண்டுமென்று உன் மனதிலே இருந்தால் இந்தப் பனாளா கெடிக்குச் சமீபமாய் நீயும் வா. நானும் வருகிறேன். இரண்டுபேருடைய சேனையையும் தூர வைத்துவிட்டு நீயும் நானுமாய் கையிலே கத்தி எடுத்து சண்டை பண்ணுவோம் என்று சொல்லி அனுப்பியதற்கு இந்த சேதி சோஅற்கான் கேட்டு காபிரிப்பட்டு பயந்து கொண்டு பதில் சேதி சொல்லாமல் இருந்துவிட்டான்.

அதன்பிறகு பனாளா கெடியிலிருந்து ராஜா புறப்பட்டுப்போய்விடுவான் என்று பாயிகான் முதலான சர்தார் கூட்டங்களை அழைத்து உள்ளேயிருந்து ஈ எறும்பு கூட வெளியிலே வராமல் வெகு ஜாக்கிரதையாய் முஸ்தீபுடனே தாக்கீது பண்ணி அவர்களும் அந்தப்படியே ஜாக்கிரதையாயிருந்த பேர்களுடைய கண்ணிலே விழாதபடி ராஜா புறப்பட்டு விசால் கெடிக்கு வந்துவிட்டார். அந்த விசால் கெடிக்கும் பனாளா கெடிக்கும் ஐந்து யோசனை தூரம் ஏழு சாமத்திலே வந்துசேர்ந்தார். அதன்பிறகு சோஅற்கான் நாலு பக்கத்திலேயும் திருட்டுத் தனமாய் சமாசாரத்துக்கு அரிக்காரரை வைத்திருந்தான். அவர்கள் பனாளா கெடியிலிருந்து ராஜா வெளியே புறப்பட்டுப்போனாரென்று சோஅற்கானுக்கு வந்து சொன்னார்கள். அப்போது சபையிலே சேதி கேட்டு பிரமித்துக்கொண்டு ஆச்சரியமாய் எண்ணத் தலைப்பட்டான். இந்தக் கெடியிலே நம்முடைய கையிலே அகப்பட்ட சத்துரு நம் எல்லோரையும் பிரமை போட்டிருந்தாற்போலே யிருந்து புறப்பட்டுப்போனான் பார்த்தீர்களா என்று ஆச்சரியப்பட்டான். இனிமேல் எதிலிஷா, அலீஷாவுக்கு எப்படி முகத்தைக் காண்பிப்பது. நம்முடைய ஜன்மம் [1]பரியாசமாய்போயிற்று.

1. பரிகாசமாய் போலும்.

சாஸ்த்தாகான் முதலான பெரிய சர்தார்களாயிருக்கப்பட்ட பேருக்கு நாசம் பண்ணின ராஜா கையிலே அகப்பட்டுக் கொண்டவனை விட்டுவிட்டாய் என்று மிகவும் கோபம் கொள்வானென்று மகூதுகானிடம் சொன்னது; முந்தாணையிலே முடிந்த ரெத்தினம் கீழே விழுந்துபோனதெப்படியோ அப்படி நாம் பார்த்துக்கொண்டிருக்கும்போது கையிலே அகப்பட்ட ராஜா போய்விட்டானே யென்று இனிமேல் என்ன செய்யலாம். தன்னுடைய காரியத்திலே ஜாக்கிரதையாயிருக்கப்பட்ட ராஜா விசால் கெடியிலே வெகுநாளிருக்கமாட்டான். ஆகையினால் நீ சீக்கிரமாய் பின் தொடர்ந்துபோய் காரியத்தைப் பாரென்று சொன்னான். அவனும் அவ்விதம் வெகு முஸ்தீபோடு போகும்போது சேற்றிலேயும் பாசியிலேயும் குதிரைகளும் கால் ஜனங்களும் வெகு அவதிப்பட்டு நடந்தார்கள்.

இவன் வருகிற சேதி ராஜா கேட்டு இந்த விசால் கெடியிலேயிருந்து கொண்டு இவனோடு சண்டை போடவேண்டுமென்று யோசனை பண்ணினார். முன்னே மகூதுகானன் பல்லிவனத்து ராஜா சூரனாயிருக்கப்பட்ட திசவந்தன் சிங்காரபுரத்து சூரியராஜா இன்னும் சிறிது சாமந்தனாயிருக்கப்பட்ட ராஜாக்களையும் அந்தக் கெடியை நிரோதம் பண்ணச் சொல்லி அனுப்பிவைத்திருந்தான். அவர்களாலே இந்த ராஜாவே அந்த விசால் கெடி துருக்கத்துக்குப் போகும்போது மறிக்க முடியாமல் போய்விட்டது. அந்த ராஜாவினாலே இவர்களெல்லோரும் அடிக்கடி அபஜெயப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களெல்லாம் ஆங்காரத்தினாலே இந்த மகூதுகானனோடு கூடி அந்த விசால் கெடியைச் சுற்றிக்கொண்டார்கள். அதைப் பார்த்து ராஜாவினுடைய ஜனங்கள் வெகு கோபத்தினாலே கெடியிலிருந்து வெளியிலே புறப்பட்டு கத்தி கேடயங்களினாலேயும் பாலா பற்சிகளினாலேயும் அடித்தார்கள். அதனாலே வெகு ஜனங்கள் சேதப்பட்டு எமலோகம் போய்ச் சேர்ந்தார்கள். திசவனத்து ராஜா, சூரியராஜா, சாமனத்த ராஜாக்கள் இவர்களுக்கெல்லாம் நிர்வாகமில்லாமல் பின்வாங்கி மகூதுகானனிடம் போனார்கள். அவன் இவர்களையும் கூட்டிக்கொண்டு தன்னுடைய சேனையையும் முஸ்தீப்பு பண்ணிக்கொண்டு அந்தக் கெடிக்கு சமீபமாய் வரும்போது ராஜாவினுடைய ஜனங்களும் போய்விழுந்து அகோரமான சண்டையாகி சின்னபின்னமாய் தலைகள், கைகள், கால்கள், உடல்கள் வெவ்வேறாய் அறுந்துவிழுந்து மிகவும் சேதப்பட்டு நிர்வாகமில்லாமல் இரணபூமியை விட்டு ஓடிப்போய் சேர்கர்கானிடம் போய்ச் சேர்ந்தார்கள்.

அதன்பிறகு சிவாஜிராஜா தன்னுடைய தேசத்திலிருந்து காலபலனை அழைத்துக்கொண்டு சேனையுடனே விசால் கெடியிலிருந்து புறப்பட்டு ஐந்தாறு நாட்கள் வழியிலே சந்தோஷமாய் நடந்து ராஜகெடிக்கு வந்து சேர்ந்து பிரகாசமாயிருக்கப்பட்ட ரெத்தின சிம்மாசனத்திலே யிருக்கப்பட்ட தன்னுடைய தாயாருக்கு நமஸ்காரம் பண்ணினார். அவளும் புத்திரனைப் பார்க்கவேண்டு

மென்று ஆசையோடிருந்தவள் புத்திரனைக் கண்டு வெகு ஆசீர்வாதங்கள் பண்ணி வெகு சந்தோஷப்பட்டாள். சிவாஜி ராஜாவும் சத்துருக்களுடைய தேசங்களை கட்டினதும் அவர்களோடு யுத்தம் பண்ணினதும் ஜெயத்தோடு வந்த சமாசாரங்களெல்லாம் தாயாரிடம் சொன்னார். அந்த ராஜகெடியிலே ராஜா வந்து சேர்ந்தவுடனே நகாரு நகபத்து முழங்கி வெகு சந்தோஷமாய் உற்சாகத்தோடு இருந்தார்கள்.

இப்படியிருக்கும்போது டில்லீசுரனுடைய அம்மான் தன்னுடைய சேனையுடனே என்ன சாமர்த்தியம் பண்ணினாலும் நடவாமல் போயிற்றென்று வெகு விசனத்தோடு இருந்தான். இந்தக் கதைகளெல்லாம் காசிவாசியாயிருக்கப்பட்ட பிராமணர் கேட்டு கவீந்திரரைப் பார்த்துக் கேட்டது; ராஜா ராஜகெடிக்குப் போய்ச் சேர்ந்தபிற்பாடு பனாளா கெடி சேதி என்னவாயிற்றென்று கேட்டார்.

இருபத்தி எட்டாம் அத்தியாயம்

அதற்கு கவீந்திரர் சொன்னது; சிவாஜிராஜா ராஜகெடிக்குப்போன பிறகு பனாளா கெடியிலே யிருக்கப்பட்ட சர்தார் திரும்பக பாஸ்கரருக்குச் சொல்லி அனுப்பினது, அங்கே சோகற்கான் யுத்தம் பண்ணுகிறான். இங்கே சாஸ்த்தாகான் முதலானவர்கள் வந்து யுத்தம் பண்ணுகிறார்கள். இரண்டிடத்திலே எப்படி யுத்தம் பண்ணுவது இங்கே காரியங்கள் மிகவும் இருக்கிறது. ஆகையினால் அந்த பனாளா கெடியை அவர்கள் வசம் விட்டு விட்டு நீ அங்கிருந்து புறப்பட்டு இங்கே வந்துவிடு. அந்த பனாளா கெடிக்குச் சமானமாயிருக்கப்பட்ட கெடியை க்ஷணத்திலே வாங்குவோமென்று தன்னுடைய ஏசிப்புடனே சொல்லி அனுப்பிவைத்தார். அந்த சேதியை திரும்பக பாஸ்கரர் கேட்டு தான் யுத்தத்திலே சமர்த்தனாயிருந்தாலும் எஜமானனுடைய உத்தாரப்படிக்கு நடக்கவேண்டுமென்று அந்த பனாளா கெடியை கவுல்மேலே அவர்களுடைய சுவாதீனம் பண்ணி அந்த சோகற்கானனுடைய பேட்டியும் வாங்கிக்கொண்டு உபசாரமாய் சொன்னார். அவனும் சிவாஜிராஜாவினுடைய தயவு நம்மேல் இருக்கவேண்டுமென்று திரும்பக பாஸ்கரனுக்கு பல வெகுமானங்கள் கொடுத்து அனுப்பிவைத்தான். திரும்பக பாஸ்கரனும் தன் சேனையோடுகூட ராஜகெடிக்கு வந்து ராஜாவுக்கு முசிரா பண்ணி பேட்டி வாங்கினார் என்று கவீந்திரர் சொன்னார்.

அதற்குமேல் கவீந்திரரைப் பார்த்து பிராமணர் கேட்டது; முன்னே சிவாஜி ராஜாவினுடைய சொப்பனத்திலே துளஜாதேவி அம்மன் வந்து இந்த சோகற்கான் ஒரு காரணத்தினாலே நாசத்தை அடையப்போகிறானென்று சொல்லியிருந்தாரே அந்த சோகற்கான் எந்தவிதமாய் நாசத்தை அடைந்தான். அந்தக் கதையை விஸ்தாரமாய் சொல்லவேண்டுமென்று நீங்கள் சொல்லுகிற கதைகள்

இன்னும் கேட்கவேண்டும், கேட்கவேண்டுமென்று வெகு ஆசையாயிருக்கிறது ; சொல்லுங்கள் என்று கேட்டார்கள்.

அதற்குமேல் கவீந்திரர் சொன்னது அந்த துளஜாதேவி அம்மனுடைய ஆக்ஞைப்படி ராஜா பனுளா கெடி விட்டுப்போன பிற்பாடு அந்த பனுளா கெடியும் சோகற்கானனுடைய அதிர்ஷ்டத்தினாலே கைவசமாயிருக்கும்போது புத்தியீனனாயிருக்கப்பட்ட அல்லீஷாவுக்குத் தோன்றிற்று. இந்த சோகற்கான் [1] பரிதானத்தை வாங்கிக்கொண்டு கையிலே அகப்பட்ட ராஜாவை விட்டுவிட்டானென்று சோகற்கான் மேலே கோபம் பண்ணி காகிதம் எழுதி அனுப்பினது என்னவென்றால் நீ ராஜாவினிடம் வெகு பரிதானத்தை வாங்கிக்கொண்டு ராஜாவுக்கு உபேட்சை பண்ணிவிட்டுவிட்டாய். நீ அந்தக் கெடியை சுற்றிக்கொண்டிருக்கும் போது ராஜா வெளியிலே போவதற்கு ஆகுமா. உன்னுடைய சம்மதி மேலே நடந்த காரியமென்று நாம் எண்ணுகிறோம். ஆகையினால் நீ இங்கே வந்து ராஜா பரிதானம் கொடுத்த திரவியமெல்லாம் கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் உன்னை உயிரோடு அடித்துப்போட்டு விடுவேன் என்று இவ்விதம் காகிதம் அனுப்பிவைத்தான்.

அந்தக் காகிதத்தைப் பார்த்துக்கொண்டு இனிமேல் அங்கே போகக் கூடாது. நாம் என்ன சொன்னாலும் அவனுக்கு மெய்யாகத் தோன்றக் கூடாது என்று வெகு சூரனாயிருக்கப்பட்ட சோகற்கான் பயப்படாமல் கடினமாயிருக்கப் பட்ட கர்ணபுரத்துக்குப் போய் ஆசார் பிடித்தான். அதற்குமேல் கிருத்திருமம் பண்ணி சாராயத்திலே விஷம் போட்டு சோகற்கானுக்கு அல்லீஷா அனுப்பி வைத்தான். சோகற்கானும் அதைக் குடித்து செத்துப்போய்விட்டான், இப்படிப் பட்ட சோகற்கான் உபகாரம் பண்ணினவனை அல்லீஷா அபகாரம் பண்ணினான். இது ஆச்சரியமல்லவா. அம்மனுடைய பிரசாதத்தினாலே அமானுஷமாயிருக்கப் பட்ட ராஜாவை பிடிப்பதற்கு எவனாலே ஆகும் என்று இவ்விதம் சோற்கான் நாசத்தை அடைந்த சேதி கவீந்திரர் சொல்ல இன்னும் அவருடைய கதைகள் சொல்லுகிறேன் என்று சொல்ல ஆரம்பித்தார்.

அது என்னவென்றால் ராஜகெடியிலே சிவாஜி ராஜாவானவர் அந்தக் கெடிக்கு அகழ்போல சுற்றிக்கொண்டிருந்த சத்துரு ஜனங்களையெல்லாம் அடித்து சம்ஹாரம் பண்ணி ஜெயத்தோடு இருக்கும்போது மொகலனுடைய சேனை சங்கிராம துருக்கத்துக்கு மேலே வந்து சண்டை பண்ணி அந்தத் துருக்கத்தை வாங்கினானென்று சேதி வந்தது. அதுகேட்டு புத்திவந்தர்களாயிருக்கப்பட்ட தன்னுடைய பிரதானிகளை அழைத்து ராஜா சொன்னது : ஒரு காரியத்தினால் நான் இங்கு வந்துவிட்டேன். இந்த சமயத்திலே சங்கிராம துருக்கம் சக்கிரவதிபுரம் போய்விட்டது. இப்போதுதான் நான் போய் அந்தத்

1. பரிதானம்-கைக்கூலி.

துருக்கமும் சக்கிராவதிபுரமும் வாங்கவேண்டுமென்று இச்சிக்கிறேன். இனிமேல் எந்தக் காரியம் எப்படி வருமோ அதற்கு இப்போது நாமெல்லோருமாய் கூடி ஜாக்கிரதை பண்ணவேண்டும். சகாயமில்லாமல் சத்துருக்களுடைய சேனையை ஜெயிக்கக்கூடாது. ஆகையினால் வெகு எத்தனத்தினாலே புத்திவந்தனாயிருக்கப் பட்ட ராஜாக்கள் அறுபது நாழிகையும் சத்துருவை நிக்கிரகம் பண்ணக்கூடிய சேனையை சேகரம் பண்ணிக்கொண்டிருக்கவேண்டும். பெரிய ராஜாவாய் இருந்தாலும் திரவியமில்லாமல்போனால் சேனை சேகரமாக—மாட்டாது. திரவியத் தினாலேதான் திரவியம் சேகரமாகிறது. அதனாலேதான் தர்மமும் விருத்தியடை கிறது. நினைத்தபடி காரியங்களும் சேகரமாகிறது. ஆகையினால் இந்தப் பிரபஞ்சத்திலே திரவியமே முக்கியம். திரவியத்தினாலே குலம், வயது, வித்தை, சாமர்த்தியம், மெய் பேசுகிறவனென்று தோன்றுகிறது. திரவியமில்லாமல்போனால் அவன் பிழைத்திருந்தும் செத்தவனைப்போல்தான். எவனிடம் திரவியமிருக்கிறதோ அவனுக்கே சாமர்த்தியமும் மித்திரர்களும் சகாயமும் வந்து சேருவார்கள். ஆகையினால் அப்படிப்பட்ட திரவியத்தை நம்முடைய புஜபல பராக்கிரமத்தாலே இந்த பூமி எவரெவருடைய சுவாதீனமாயிருக்கிறதோ அவர்களையெல்லாம் அடித்துக் கலைத்து திரவியத்தை சம்பாதித்துக்கொண்டு வருவேன்.

அதற்குமேல் இந்த டில்லீசுரனுடைய [1]அம்மானாயிருக்கப்பட்ட சாஸ்த்தா கானனை அடித்து சம்ஹாரம் பண்ணுகிறேன் என்று இவ்விதம் பேசினார். அது கேட்டு பிரதானி சொன்னது, நீங்கள் சொன்னதெல்லாம் நிஜந்தான். சமர்த்தரா யிருக்கப்பட்டவர் கையிலே திரவியமிருந்தால் அவன் வெகு சாமர்த்தியவானாவான். ஏழை கையிலே திரவியமிருந்தால் அது அனர்த்தத்தைக்கொடுக்கும். பிரபஞ் சத்திலேயிருக்கிற திரவியமெல்லாம் உங்களுடையதுதான் என்று எண்ணு கிறேன். ஆகையினால் திக்விஜயம் பண்ணுவதற்குப்போகலாம். ஆனாலும் இப்போது டில்லீசுரனுடைய அம்மான் சேனாதிபதியாய் வெகு ஜாக்கிரதையோடு சங்கிராம துருக்கத்தை வாங்கிக்கொண்டு வெகு சந்தோஷத்தினாலே புனா பட்டணத்திலேயிருக்கிறான். நீங்கள் இங்கேயிருக்கிற சேதி கேட்டு தனக்கு என்ன [2]அனிஷ்டம் வருமோ என்று எண்ணிக்கொண்டு சைய பர்வதத்திலே யிருந்து இறங்கவேண்டுமென்று அந்த வழியாய் சேனையை அனுப்பிவைத்தான். அந்த சேனை சைய பர்வதத்து மேலே வந்து கீழே எப்படி இறங்கமாட்டாதோ அப்படி பண்ணவேண்டும். இன்னும் இதரமாயிருக்கப்பட்ட வழிகளெல்லாம் [3]பந்துபசத்து பண்ணவேண்டுமென்று இப்படி சமயோசிதமாய் பிரதானி பேசினான். அந்த வார்த்தையை ராஜா கேட்டு யுக்தமேயென்று ஒப்புக் கொண்டார்.

1. அம்மான் — தகப்பன், மாமன்.
2. அனிஷ்டம் — பிரியவீனம்.
3. பந்தோபஸ்து.

இப்படியிருக்கும்போது புனு பட்டணத்திலே யிருக்கிற சாஸ்தாகானன் எழுபத்திமூவாயிரங் குதிரைகளோடு இருந்தவன் என்ன பண்ணினனென்றால் காற்தல்பகான் என்கிறவனை அழைத்துச் சொன்னது; உன்னுடைய தகப்பனர் வெகு பிரதாபசாலி, நீயும் யுத்தங்கள் பண்ணித்தான் காலட்சேபம் பண்ணுகிறாய். மகா பிரபலனயிருக்கப்பட்ட காலீப்கானை ஜெயித்து அவனுடைய பிரசண்ட புரத்தை வாங்கிக்கொண்டு எனக்குக் கொடுத்தாய். இப்போது சையபர்வதத் துக்கு ராஜாவாயிருக்கப்பட்டவனுக்கு ஜெயிப்பது மகா கடினம். இரணகளத்திலே வெகு சாகசம் பண்ணுகிறவன்; அவ்வாறு நீயும் சூரனயிருக்கிறாய். அந்த சைய பர்வதம் வாங்காமல் போனல் அந்த ராஜா அடங்கமாட்டான். ஆகையால் நீ இப்போது சேனையோடு அந்த பர்வதத்து மேலே போய் இறங்கவேண்டும்.

இன்றையமுதற்கொண்டு நீ எப்படி சொல்கிறாயோ அப்படி நான் கேட்கிறேன். நீ சையபர்வதம் இறங்கி சம்பாவதி, கலியாணபுரம், வீமபுரம், பணவல்லி, நாகஸ்தானம் இவற்றையெல்லாம் சுவாதீனம் பண்ணிக்கொள்ள வேண்டும். உடனுடன் கூட சகாயமாய் கச்சபன், பலவனத்தன், சச்வாண், அமர்சிங்கன், மித்திரசேனன், சற்சே, ராஜே, ராஜவியாக்கிரி, கோக்கர்டே, தேசவனத்தன், யாதவன் இவர்களெல்லோரையும் போகச்சொல்லி சொல்லியிருக்கிறேன். இவர்களுக்கெல்லாம் நீ சேனபதியாய் வெகு ஜாக்கிரதை யோடு முன்னே போ. நான் உனக்குப் பின்பலனய் வருகிறேனென்று சாஸ்தா கானன் சொன்னன். அப்படியே காற்தல்பகான் சூரர்களோடு புறப்பட்டு பயமில்லாமல் லோகாத்திரி பர்வதத்துக்கு தென்புறமாய் சையபர்வதம் இறங்கு வதற்குப் போகும்போது வழி வெகு கடினமானதால் கொஞ்சம் பக்கத்திலே சாய்ந்தாலும் கீழே விழுவோமென்று பயந்துகொண்டு மெள்ளமெள்ள சைய பர்வதத்தைத் தாண்டினர்.

அப்புறம் வெகு ஆங்காரத்தோடு கூடின காற்தல்பகான் சேனையோடு போகும்போது ஆரண்யமாயிருக்கப்பட்ட காடு பார்த்தான். அந்தக் காட்டிலே ராஜாவினுடைய ஜனங்கள் இருந்ததைப் பாராமல் இந்தக்காட்டிலே ஒருவரும் இல்லையென்று அந்தக்காட்டிலே பிரவேசித்து நடந்தான். அப்போது மித்திர சேனன் முதலான ராஜாக்கள் அவன்கூட நடந்தார்கள். காற்றுகூட புகாம லிருக்கப்பட்ட காட்டிலே போகும்போது சூரியன் கூடத் தெரியாமலிருக்கப் பட்ட காடு இன்றைக்கு நாம் பார்த்தோமென்று(ம்) நாம் வந்தது ஒருவருக்கும் தெரியாதென்றும் எண்ணிக்கொண்டிருந்தான்.

இப்படியிருக்கும்போது கவீந்திரரைப் பார்த்து பிராமணர் கேட்டது; காற்தல்பகான் சைய பர்வதத்திலேயிருந்து இறங்கும்போது சிவாஜிராஜா அவனைப் போய் மறியாமல் விட்டு விட்டது ஏன்? அவனும் சைய பர்வதத்து மேலே தானேயிருந்து அந்த பர்வதத்தினுடைய ஆசரு பிடித்துக்கொண்டு

சிறிது சீமைக் கட்டாமல் அந்தக்காட்டிலே வந்ததென்னவென்று கேட்டதற்கு கவீந்திரர் சொன்னது; அவன் சைய பர்வதத்திலே யிருந்து இறங்கும்போது மறித்தால் அவன் காட்டுக்குள்ளே வரமாட்டான். அவன் காட்டுக்குள்ளே வந்த பிறகு மறித்துக்கொண்டு அடிக்க வேண்டுமென்று யிருந்தாரென்று கவீந்திரர் சொன்னார்.

அதன் பிறகு ராஜா போய் வழியை மறித்தார். அவர் பாரிச காலாள் ஜனங்கள் காட்டுக்குள்ளே பதுங்கியிருந்தார். அந்த சேதி காற்தல்பகானுக்குத் தெரியாமல் சேனையோடுகூட உம்பர் என்கிற கிராமத்து காட்டுவழியே பிடித்துக் கொண்டு நடக்கும்போது நகாரு சப்தத்தைக் கேட்டு ராஜா வந்துவிட்டாரென்று தன்னுடைய சர்தார்களுக்கெல்லாம் சாவதானமாயிருக்கச்சொல்லி தாக்கீது பண்ணினான். துங்காரண்யத்து ராஜா மகாபாகுவாயிருக்கப்பட்ட மித்திரசேனன் குதிரையிலிருந்து கீழே இறங்கி உயரமாயிருக்கப்பட்ட பூமியைப் பார்த்து அது மேலேறி தன் ஜனத்தோடுகூட கையில் வில் அம்பு எடுத்துக்கொண்டு பாணத்தினாலே அடிப்பதற்கு சித்தமாயிருந்தான். அமர்சிம்மன் முதலான ராஜாக்களும் தத்தம் ஜனத்தோடு கூடிக்கொண்டு மித்ரசேனன் போலே நின்று கொண்டார். சமர்த்தனாயிருக்கப்பட்ட காற்தல்பகானும் சேனையோடுகூட யுத் தத்துக்கு நின்றான். அதற்குமேல் அவர்களெல்லோரும் பாணங்களினாலே ராஜாவினுடைய சேனையைப் பார்த்து அடித்தார்கள். அவர்களும் அடிக்கிறபோது மித்திரசேனனுடைய சேனை அந்தக் காட்டிலே மூலைக்குமூலை ஓடத்தலைப்பட்டது. அவர்களுக்கெல்லாம் தைரியங்கொடுத்துதான் பாணங்களினாலே அடிக்கத் தலைப்பட்டான். அதனால் ராஜா பாரிசத்து சர்தார்களுக்கு காயங்கள் ஏற்பட்டு சிறிதுபேர் கீழே விழத் தலைப்பட்டார்கள்.

அப்போது ராஜா தன்னுடைய சேனாதிபதியைப் பார்த்து இந்தக்காட்டு வழியை மறித்துக்கொண்டிருங்கள் என்று சொல்லி தான் பாணங்களினாலே அடிக்கத்தலைப்பட்டார். அவர் பாரிசத்து ஜனங்களும் கத்தியினாலே வெட்டும் போது இரத்தத்தினால் அந்தக்காடெல்லாம் செக்கச்செவேறென்று சோபிக்கத் தலைப்பட்டது. மித்திரசேனன் தன்னுடைய ஜனங்களை என்னதான் இரட்சித் தாலும் நிற்கமாட்டாமல் ஓடத்தலைப்பட்டார்கள்.

இருபத்தி ஒன்பதாம் அத்தியாயம்

அந்தக்காட்டிலே அகப்பட்டுக்கொண்டு வழி தெரியாமல் வெகு சங்கடப் பட்டுக் கொண்டிருக்கிற ஜனங்களைப் பார்த்து ராஜ வியாக்கிரி என்கிறவர் காற்தல்பகானுக்குச் சொன்னது; நீ சத்ருவினுடைய தொடைமேலே சேனையைக் கொண்டுவந்து விட்டுவிட்டாய், என்ன காரியம் பண்ணினாய். சிவாஜி ராஜா என்கிற சிம்மத்தினாலே இரட்சிக்கப்பட்ட காட்டிலே டில்லீசுவரனுடைய

சேனையைக் கொண்டுவந்து மாட்டிவிட்டாய். இது வரைக்கும் டில்லீசுரன் சம்பாதித்த கீர்த்தியை நீ முழுகடித்தாய். முன்னும் பின்னும் பக்கத்திலும் சிவாஜி ராஜாவினுடைய ஜனங்கள் யுத்தத்திற்கு ஆயத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய பாரிசத்து ஜனங்களெல்லோரும் பிரமித்துப் போயிருக்கிறார்கள். டில்லீசுரனுடைய சேனாதிபதி சாஸ்தாகானன் புத்தியில்லாமல் சிவாஜி ராஜா என்கிற அக்கினியிலே உன்னை அனுப்பிவைத்தான். உன்னை ராஜா பாரிசத்து ஜனங்கள் பிடித்துக்கொண்டுபோக வேண்டுமென்று யோசனை பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். நீ குருடன் போல் ஒன்றும் பாராமல் யுத்தம் பண்ண வேண்டுமென்று இச்சிக்கிறாய். உன்னுடைய சாமர்த்தியம் நடக்க மாட்டாது. ஆகையினால் ஆங்காரத்தை விட்டுவிட்டு விரைவில் சிவாஜி ராஜாவுக்கு சரணமாய் போய் சேனையை மிருத்தியுவினுடைய பாரிசத்திலே அகப்பட்டதை விடுவித்துக் கொண்டுபோக வேண்டுமென்று இவ்விதம் சொன்னார்.

அதைக்கேட்டுக்கொண்டு காற்தல்பகான் யுத்தத்தை விட்டுவிட்டு வணங்கி தூதனை ராஜாவினிடம் அனுப்பிவைத்தான். அவன் விஷ்ணுவுக்கு சமானமாயிருக்கப்பட்ட மகாசூரனாய், தேசோவனத்தனாய், ஆசானபாகுவா யிருக்கப்பட்ட ராஜாவிடம் வந்து முசிரா பண்ணி நின்றார். அவனை ராஜாபார்த்து கண்சைகையினாலே நீயாரென்று கேட்டார். என்னைக் காற்தல்பகான் அனுப்பி வைத்தான். நான் அவனுடைய [1]ஏசிப்பு அவர் சொல்லச் சொன்னது; என்னுடைய கிராசாரத்தினாலே சாஸ்தாகானனுடைய பேச்சைக்கேட்டுக் கொண்டு இந்தக்காட்டிலே வந்தேன். உம்மாலே ரெட்சிக்கப்பட்ட இந்ததேசம் சர்ப்பத்தினுடைய தலையிலே இருக்கப்பட்ட ரெத்தினத்துக்கு ஆசைப்பட்டாற் போலே நமக்கு கைவசமாகுமா; இந்தக்காட்டிலே இரண்டு மூன்று நாட்களாய் குடிக்கத் தண்ணீர் கூட அகப்படாமல் துங்காரண்யத்துக்காகிலும் இந்த சையாரண்ணியம் பாதாளமாயிருக்கப்பட்ட காட்டிலே அகப்பட்டுக்கொண்டு என்னுடைய சாமர்த்தியத்தை யெல்லாம் மறந்து போனேன்.

இப்படிப்பட்ட என்னை அபயத்தைக்கொடுத்து ரெட்சிக்கவேண்டும். நான் துலுக்கனானாலும் உங்களுடைய பெரியவர் ஷாஜிராஜாவோடு சினேகமா யிருந்தோம். ஆகையினால் என்னிடம் இருப்பதை யெல்லாம் கொடுத்து விடுகிறேன். என்னை அவமானம் பண்ணாமல் பிராணனைக் காப்பாற்ற வேண்டு மென்று எண்ணுகிறேன் என்று இவ்வாறு அந்த ஏகிப்புச் சொன்னான்.

அதற்கு ராஜா தன்னுடைய சர்தார்களைப் பார்த்து அந்த ஏசிப்போடு சொன்னது; நீ சரணமாய் வந்தது மெய்யானால் உன் சேனையோடு கூட இந்த தேசத்தை விட்டுப் புறப்பட்டுப்போய்விடு. நான் அபயம் கொடுத்தேன். நீ

1. ஹேஜீப் என்ற மராத்திசொல், தலைவன், தூதன் என்ற இரு பொருளிலும் வந்துள்ளது.

விரைவில் போய் காபிசிப்பட்டுக்கொண்டிருக்கிற உன்னுடைய எஜமானனுக்கு சேதி சொல் என்று ஏசிப்புக்கு சேதி சொல்லி யனுப்பிவைத்தார். அவனும் எசிப்பு எப்போது வருவானென்று வழிபார்த்துக்கொண்டேயிருந்தான். ஏசிப்பு வந்து சேதி சொன்னவுடனே இருந்த திரவியத்தைக் கொடுத்துவிட்டான். மித்திரசேனன் முதலான ராஜாக்களும் பர்வதத்தை அடைந்து தன்னிடமுள்ள திரவியங்களை யெல்லாம் கொடுத்து அனுப்பி வைத்தார். கையில் கொடுப்பதற்கு முன்னே சிவாஜி ராஜா பாரிசத்து ஜனங்கள் சத்துரு ஜனங்களுடைய வஸ்திர பூஷணங்கள் கத்திகேடயங்கள் சகலமானதெல்லாம் கொள்ளையடிக்கும்போது சிறிது பேருக்கு காதுகள் அறுந்துபோயிற்று. அதைப்பார்த்து சிலர் கழுத்துகளிலே போட்டிருந்த முத்தாரங்கள் பதக்கங்கள் முதலியவற்றை எடுத்துக்கொடுக்கத் தலைப்பட்டார்.

இப்படி அலமலந்து கொண்டு சின்னபின்னமாயிருக்கும்போது ராஜா பாரிசத்து சோப்புதாருகள் வந்து கை உயரத் தூக்கி சண்டைபோட வேண்டாமென்று சேனாபதிக்குச் சொல்லி சண்டையை நிறுத்தி விட்டான். அதன் பிறகு வந்த வழியைப்பிடித்துக் கொண்டு சத்துருக்களெல்லோரும் அந்தக்காட்டை விட்டு போகத்தலைப்பட்டார்கள். அப்போது சத்துருவினுடைய யானைகள், குதிரைகள், திரவியங்கள் போட்டிருக்கிற பெட்டிகள், பொன் பாத்திரங்கள், வெள்ளி பாத்திரங்கள், சகல சாமான்களெல்லாம் கொள்ளையடித்துக்கொண்டு அவர்களை உயிரோடு விட்டுவிட்டார்கள்.

அதன் பிறகு சிவாஜி ராஜா பாரிசத்தில் ஜெயபேரிகை யடித்து உற்சாக சந்தோஷமாயிருக்கத் தலைப்பட்டார்கள். அப்போது சிவாஜி ராஜா நேத்தா என்கிற சர்தாரை அழைத்துச் சொன்னது, நான் எதிலி அல்லீஷாவினுடைய ராஜ்யத்தைக் கட்டுவதற்குப் போகிறேன். பனாளா கெடிக்கு பதில் கெடி வாங்க வேண்டுமென்று என்மனதிலேயிருக்கிறது. அதற்கு இப்போது எத்தினம் பண்ணினால் தான் காரியங்கூடிவரும். ஆகவே இந்த துலுக்கரை சிக்ஷிப்பதற்கு நீ இங்கேயே இரு. அவர்கள் ஆனால் இப்போது அபஜெயப்பட்டிருக்கிறார்கள். நமக்கு ஒன்றும் செய்யமாட்டாரென்று அசட்டையாயிராதே. சாவதானமாயிரு என்று சொல்லிவிட்டு ஜெயபேரிகை அடித்து குதிரையின் மேல் ஏறி தன்னுடைய சேனையோடு கூட புறப்பட்டு வழியிலே பட்டணங்கள், கிராமங்கள், பர்வதங்கள், காடுகள், இவைகளெல்லாம் பார்த்துக்கொண்டு சந்தோஷமாய் தாலப்பிய புரத்துக்கு வந்து சேர்ந்தார். அங்கே அந்த தாலப்பியபுரி ஈசுவரனை சேவித்து முன்னே அந்த தேசத்தைக் கைவசம் பண்ணிக்கொண்டு அங்கேயிருக்கிற ஜனங்களை துலுக்கருடைய பயத்திலிருந்து விடுவித்தார்.

அப்போது பல்லி வனத்துராஜா சேசவந்தன் என்கிறவன் முன்னே சோஅற்கானனுக்குச் சகாயம் பண்ணினதிலே இந்த ராஜா வருவதைக்கேட்டு பயந்து சிங்காரபுரத்து சூரிய ராஜாவுக்கு சரணமாய்போனான். அந்த சூரிய

ராஜாவும் இவனை ரெட்சித்தான். அப்போது சிவாஜிராஜா அவர்கள் இந்த சூரிய ராஜா சேசவனத்தன் இவர்கள் இரண்டும் முன்னே அபகாரம் பண்ணினதை எண்ணுமலிருந்தார். அதன் பிறகு அந்த தாலப்பிய புரத்திலே இரண்டாயிரம் ஜனத்தையும் ஒரு சர்தாரையும் வைத்துவிட்டு போகும்போது சிறிது தேசத்து ஜனங்கள் சரணமாய் வந்தவருக்கு அபயத்தைக் கொடுத்து சித்திரபுலினம் என்கிற நகரத்துக்குப்போய் அங்கே பரசுராமனுடைய தரிசனம் பண்ணி அங்கிருக்கும் பிராமணர்களுக்கு தானதர்மங்கள் கொடுத்து அங்கிருந்து சங்கமேசுவர நகரத்திற்கு வந்து அதையுங் கைவசம் பண்ணிக்கொண்டு அங்கிருக்கும் பிராமணர்களுடைய தரிசனம் பண்ணிக்கொண்டு தேவரிஷி என்கிற ஸ்தலத்திற்கு வந்தார்.

அப்போது ராஜாவினுடைய உத்தரவுமேல் நீலகண்ட ராஜாவினுடைய பிள்ளை, பின்னையும் ஒரு பிராமண சர்தார் மல்லசுரன் இவர்கள் சிறிது கால் பலத்தோடு யுத்தத்திலே சமர்த்தராயிருக்கப்பட்டவர் தாஞசித்தன் என்கிற வனேடுகூட சத்துருக்கள் பயத்தினுலே காபிரிப்பட்டு சங்கமேசுவர பட்டணத்துக்கு வந்துசேர்ந்தார்கள். அவர்களை அங்கே வைத்து அதன் பிறகு சிங்கார புரத்து சூரிய ராஜாவுக்கு சிவாஜிராஜா தன் ஏசிப்போடு சொல்லி அனுப்பி வைத்தது, இந்த பிராந்தியத்திலே ரெட்சிப்பதற்கு சிறிது சேனையை சங்கமேசுவர பட்டணத்திலே வைத்திருக்கிறேம். நீர் நம்முடைய பேச்சை கேட்டுக்கொண்டு திரேஷத்தை விட்டு விட்டு நான் திருப்பி வரும்வரை அந்த சேனையை ரெட்சித்துக்கொண்டிருக்கச்சொல்லி அனுப்பிவைத்து அதன் பிறகு புன்னுக விருட்சம். [1] மகுளவிருட்சம், கமுக மரங்கள், தென்னை மரங்கள், சிங்காரத் தோட்டங்கள். தேவாலயங்கள், வெகு பிராமணர்கள் நிறைந்திருக்கப்பட்ட ராஜபுரத்தை சுவாதீனம் பண்ணிக்கொண்டு அங்கேயிருக்கப்பட்ட துலுக்கரை எல்லாம் சிட்சை பண்ணி அந்த தேசமெல்லாம் வாங்கிக்கொண்டு தனக்கு சரணமாக வந்தபேருக்கெல்லாம் அபயங்கொடுத்து அந்த தேசம் சமுத்திரக் கரையான படியினுலே கப்பல் வியாபாரம் பண்ணும் வர்த்தகர்களிடம் வெகு திரவியங்களை வாங்கிக்கொண்டு குபேரன்போல் தனவந்தனுய் தேவேந்திரன்போல் ஐசுவரியவனத்தனுய் விளங்கினுன்.

முப்பதாம் அத்தியாயம்

அந்த ராஜ புரத்திலேயிருந்து கொண்டு வெகுசமத்துக்காரமாய் பீரங்கிகள் சுடுகிற கரை துறையிலே யிருக்கப்பட்ட வெள்ளைக்காரரைக்கொண்டு அந்த வேடிக்கைகள் பார்த்துக்கொண்டும் சோனகரைக்கொண்டு சமுத்திரத்திலே கப்பலோட்டச்சொல்லி அந்த வேடிக்கைகளையும் பார்த்துக்கொண்டு அதன் பிறகு

1. மகிழமரம்.

மலைவார தீபாந்தரங்களிலே யிருக்கப்பட்ட கப்பல் வியாபாரம் பண்ணுகிற வர்த்தகர்களையும் அங்கே [1]சாமந்தனுயிருக்கப்பட்ட சத்துரு ராஜாக்களையும் அழைத்தனுப்பி அவரவரிடம் இருக்கும் திரவியங்களை அழைப்பித்து எல்லாம் கைவசம் பண்ணிக்கொண்டார்.

ராஜபுரத்திலே பூமியிலே புதைத்திருந்த [2]மோருக்கள் நிறைந்திருக்கும் அண்டாக்கள் அகப்பட்டு அதையெல்லாம் வெட்டியெடுத்து அஞ்சனம் போட்டு பார்த்தாலெப்படியோ அப்படி ராஜாவினுடைய பார்வை எங்கெங்கு போகிறதோ அங்கெல்லாம் வெட்டிப்பார்த்து எடுக்கச்சொல்லி மேருவுக்கு சமானமாய் சொர்ண ராசிகள் போட்டு அவரவர்கள் கொண்டுவந்த [3]தோப்பாக்கள், நவரத்தினங்கள், பொன், வெள்ளி, செம்பு, பித்தளை, ஈஃகு, இரும்பு, முத்துக்கள், யானைதந்தங்கள் சாமரங்கள், கஸ்தூரி, குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம்; கிருஷ்ணுகெரு, ரத்தசந்தனம், ஏலம், லவங்கம், ஜாதிக்காய், ஜாதிபத்திரி, கொடிமுந்திரி, பேரீச்சு, அச்சுப்பாக்கு, திப்பிலி, திப்பிலிமூலம், மிளகு இதுமுதலான பலசரக்கு சாமான்கள் என்னென்ன உண்டோ அவைகளும் இது தவிர உயர்வாயிருக்கப்பட்ட தாப்த்தாக்கள், சால்வைகள், வஸ்திரங்கள், பேட்டிக்கு வந்த சாமான்களெல்லாம் ஆட்கள் மேலும், ஒட்டையின் மேலும், யானைகள் மேலும் எடுப்பித்துக்கொண்டு வந்து அந்தந்த கெடிகளிலே சேர்த்து விட்டார்.

சடவல்லி, நாந்தவாடே, குனத்தவாட்டம், கேலவல்லி, கசலி, பிலவவடம், சராபட்டணம் முதலான பட்டணங்களுடைய ராஜாக்கள் கொண்டுவந்த தோப்பாக்கள் வாங்கிக்கொண்டு அவர்களையெல்லாம் கைவசம் பண்ணிக் கொண்டு பிரதாபத்துடனே தன்னுடைய ராஜ்யத்திற்கு போகவேண்டுமென்று திரும்பினுர் என்று கவீந்திரர் சொன்னதைக்கேட்டு பிராமணர் கேட்டது; சிவாஜி ராஜா துலுக்கனுடைய சேனையை துரத்திவிட்டு தாலப்பியபுரம் வாங்கிக்கொண்டு சித்ரபுலினம் சுவாதீனம் பண்ணிக்கொண்டு பிரயாசைப் படாமல் சங்கமேசுவர நகரமும் வாங்கிக்கொண்டு ராஜபுரத்திலேயும் பாதாளம் வரைக்கும் வெட்டி யிருக்கிற தனத்தையும் எடுத்துக்கொண்டு அந்தப் பிராந்தியத்திலேயிருக்கப்பட்ட பேர்களிடம் தோப்பாக்களும் வாங்கிக்கொண்டு அந்த தேசமெல்லாம் கைவசம் பண்ணிக்கொண்ட சேதி யெதிலிஷா கேட்டு என்ன பண்ணினுர், அது சொல்ல வேண்டுமென்று கேட்டார்.

அதற்கு கவீந்திரர் சொன்னது: எதிலிஷா யோசனை பண்ணிக்கொண்டு சிங்காரபுரத்து சூரியராஜாவுக்குச்சொல்லி அனுப்பினது, நம்முடைய சத்துரு சிவாஜி ராஜா வெகு கடினமாயிருக்கப்பட்ட உன்னுடைய காட்டிலேயிருந்து ராஜபுரத்துக்குப் போகும்போது நீ மறியாமல் விட்டு விட்டாய், நல்லது. இப்போவானுலும் ராஜ புரத்திலேயிருந்து திரும்பி வரும்போது மறிக்கச்சொல்லி வெகு விசனத்தோடு

1. சிற்றரசர் 2. மோரு-பொற்காசு, 3. ஒருவகை பீரங்கி போலும்

சொல்லி அனுப்பிவைத்தாரென்று கவீந்திரர் சொன்னர். அதற்கு பிராமணர் கேட்டது.

எதிலிஷா தன்னிடம் சேனுபதிகள் இருக்கும்போது அவர்களுக்கு சொல்லாமல் இந்த காரியம சூரிய ராஜாவுக்கு எது நிமித்தியமாய் சொல்லியனுப்பி வைத்தாரென்று கேட்டார். அதற்கு கவீந்திரர் சொன்னது முன்னே ருஸ்த்தும் முதலான ராஜாக்கள் சிவாஜி ராஜாவினுலே அபஜெயப்பட்டு வந்தபடியினுலே திரும்பி அவர் மேலே போகமாட்டாரென்று இந்த சூரிய ராஜா கால்பலத்தை மிகவும் வைத்துக்கொண்டிருக்கிருன். இந்த காரியத்துக்கு அவன் சமர்த்த னென்று அவனுக்கு சொல்லியனுப்பி வைததானென்று கவீந்திரர் சொன்னர்.

அதன் பிறகு எதிலிஷாவினுடைய உத்தாரப்படிக்கு சூரிய ராஜா துற்புத்தி யினுலே சிவாஜி ராஜா அவர்கள இந்தக் காட்டு வழி வெகு கடினமாயிருக்கிறது. தாராளமா யிருக்கவேண்டுமென்று சங்கமேசுவர நகரத்திலே சிறிது சேனையை வைத்திருந்தாரே அந்த சேனையை சூரிய ராஜா சிறிது ஜனங்களோடு ராத்திரி யிலே போய் சுற்றிக்கொண்டார், அப்போது சிவாஜி ராஜா பாரிசத்து தானசித்து முதலான சர்தார் எல்லோரும் கர்ஜனைகள் பண்ணிக்கொண்டு ஆயுதங்கள் எடுத்துக்கொண்டு முஸ்தீப்பானுர்கள். அதிலே நீலகண்ட ராஜாவினுடைய பிள்ளை பிலாசி என்கிறவன் தன்னுடைய துரதிருஷ்டத்தினுலே சூரிய ராஜாவுக்கு ஜெயம் வரவேண்டுமென்று தான் யுத்தம பண்ணுமல் ஓடிப்போக வேண்டு மென்று நினைத்துக்கொண்டு கையிலிருக்கப்பட்ட கத்தியைப் போட்டுவிட்டு நடுங்கிக்கொண்டு பயந்தவனைப்போல் ஓடத்தலைப்பட்டான். அப்போது மல்லசுரன் என்கிறவன் தொடர்ந்து அவனை அடித்து அதட்டி உனக்கு நான் சகாயமாயிருக்கிறேன். நீ சேனுபதியாயிருந்து முன்னே வெகு சாமர்த்தியம் பேசினுயே! அதெல்லாம் இப்போது எங்கே போயிற்று சிவாஜி ராஜா உன் மனம்போல் உன்னை சவரட்சணை பண்ணியிருக்கும்போது சேனுபதியாயிருந்து கொண்டு நாம் சகியாதவர்களாயிருக்கப்பட்ட பேரை விட்டு விட்டு சத்துருவுக்கு ஜெயம் வரவேண்டுமென்று ஓடுகிருயா இது ஆச்சரியமல்லவோ! உனக்கு எப்படி வெட்கமில்லாமல் போய்விட்டது எனறு அவனைக் கயிற்றினுலே காலும் கையும் கட்டி பெரிய கல்லுக்கு இழுத்துக் கட்டிப்போட்டு தனக்கு எதிரே வைத்துக்கொண்டு சூரர்களைப் பார்த்து பயப்படாதீர்களென்று சொல்லி, தான் கையிலே பட்டாகத்தி யெடுத்துக்கொண்டு தானசித்து என்கிறவனும் மல்லசூரன் என்கிறவனும ராத்திரி வேளையிலே எதிரியினுடைய பாளையத்திலே புகுந்து அடிக்கத்தலைப்பட்டார்கள்.

சிவாஜிராஜாவினுடைய ஜனங்களெல்லோரும் எதிரியினுடைய ஜனங்களை அடிக்கும்போது அடே ஓடிப்போகாதீர்கள், நில்லுங்கள், இதோ கத்தியினுலே வெட்டுகிறேன், பாருங்கள், அடி அடி, பிடி பிடி, என்று இப்படியாய் சொல்லிக்

கொண்டு சண்டை பண்ணுகிறபோது கை போனவனும் கால் போனவனும், தலை போனவனும் இப்படியாய் ரெணகளம் நிறைந்து போயிற்று. அப்போது சூரிய ராஜா பாரிசத்து ஜனங்களெல்லோரும் ஓடிப்போனார்கள். அதன் பிறகு மல்லீசுரன் ஜெயபேரிகையடிக்கச்சொல்லி சிம்மனாதம் பண்ணினான்.

முப்பத்தி ஒன்ரும் அத்தியாயம்

அதன் பிறகு சிவாஜி ராஜா ராஜபுரத்திலேயிருந்து புறப்பட்டு சங்கமேசுவர நகரத்துக்கு வருகிறாரென்று சேதிகேட்டு மல்லசுரன் சேனையோடு கூட எதிரேபோய் உங்களுடைய தயவினாலே சத்துருவுடைய சேனையெல்லாம் அடித்து ஜெயித்தேன் என்று நீலகண்ட ராஜாவினுடைய பிள்ளை சேதியும் சொல்லி ராஜாவுக்கு நமஸ்காரத்தைப் பண்ணினான். அப்படிப்பட்டவனைப் பார்த்து வெகு சந்தோஷப்பட்டு வெகுமானங்களைப் பண்ணினான்.

அதற்குமேல் சூரிய ராஜா பண்ணின அபகாரத்தைக்கேட்டு ராஜாவுக்கு வெகுகோபம் வந்தது. அந்தக்கோபத்தை அடக்கிக்கொண்டு அரிக்காரன் உடனே சிறிது சமாசாரங்கள் சொல்லி சூரிய ராஜாவிடம் அனுப்பிவைத்தார். அவன்போய் சொன்னசேதி என்னவென்றால் எப்போதுபார்த்தாலும் எதிலிஷாவுக்கு சகாயம் பண்ணினாய். சிவாஜி ராஜாவுக்கு அபகாரத்தைப் பண்ணினாய். நல்லது இப்போது சங்கமேசுரத்திலே வைத்திருந்தசேனையை பயமில்லாமல் இராத்திரிவேளையில் வந்து விழுந்து அடித்தாய். இப்படி பண்ணின அபகாரத்தை எப்படிச் சகிப்பர். ஆனால் உன்னுடைய யோகத்தினாலே எல்லாம் ஜெயித்து உன்மேலே தயவு பண்ணினர். அது என்னவென்று சொல்லுகிறேன்.

மதம்பிடித்த யானையைப்போல் மகா பராக்கிரமத்தோடு இருக்கப்பட்ட ராஜா பல்லிவனத்து ராஜாவினுடைய ராஜ்யம் வாங்குவதற்கு சித்தமாயிருக்கிறார். ஆகையினால் நீ பயப்படாமல் பல்லிவனத்துக்கு வந்துசேர். உனக்கு என்ன பரவசம் வேண்டுமோ, அந்தப் பரவசத்தைத் தருகிறேன். நீ வராதுபோனால் அவனைப்போலே உன்னையும் பண்ணுவேன். அப்போது உன்னை ஒருவரும் ரெட்சிக்கமாட்டார்கள் என்று இவ்விதம் ராஜா சொல்லச் சொன்னாரென்று சொன்னான். அந்த சேதி கேட்டு அந்த அரிக்காரனை நீ முன்னே போ; நான் வருகிறேனென்று சேதி சொல் என்று சொல்லி அனுப்பிவைத்தான். அவன் வந்து ராஜாவுக்கு சேதி சொன்னான்.

அதற்குமேல் பல்லிவனம் தேசமெல்லாம் கைவசம் பண்ணிக்கொண்டு யாருக்கு எந்த தயவு பண்ணவேண்டுமோ அந்த தயவு பண்ணி யாரை சிட்சிக்க வேண்டுமோ அப்படி சிட்சை பண்ணி அந்த தேசத்திலேயிருக்கப்பட்ட பிராமணர், வைசியர், சத்திரியர், சூத்திரர், வியாபாரிகள், வர்த்தகர், தச்சன்,

கொல்லன் முதலான பேர்களெல்லாம் பயத்தினாலே ஊரைவிட்டு ஓடிப்போய் இருந்தவர்களெல்லோரும் திரும்பி தத்தம் ஊருக்கு வந்துசேர்ந்து அவரவர் முன்னைப்பார்க்க அதிக ஆதாயத்தை அடைந்து சந்தோஷமாயிருந்தார்கள்.

அதற்குமேல் அவர்களையெல்லாம் ரெட்சிக்கவேண்டிய யோக்கியமாயிருக்கப்பட்ட சீர்துருக்கமென்று ஒரு பெரிய பர்வதம்; அந்த மலைமேலே கல்தச்சரை விட்டு மிக உயரமான கோட்டையைக் கட்டி அந்தப் பிராந்தியத்திற்கு பூஷணமாயிருக்கப்பட்டதென்று அந்தக் கோட்டைக்கு மண்டனகெடி என்று பெயர்வைத்து, அந்தத் துருக்கம் ரெட்சிப்பதற்கு சமர்த்தனாய் ஒரு அதிகாரியையும் சிறிது சேனையையும் வைத்துவிட்டு அதற்குமேல் சூரியராஜாவினுடைய சிங்காரபுரம் வாங்கவேண்டுமென்று புறப்பட்டாரென்று கவீந்திரர் சொன்னதை பிராமணர் கேட்டு அவர் கேட்டது, முன்னேதானே அந்த சிங்காரபுரத்தை வாங்கலாமே, அப்படி வாங்காமல் வெகு தயவு பண்ணி சூரியராஜாவுக்கு அபயத்தைக் கொடுக்கிறோமென்று எந்தக் காரணத்தினாலே சொல்லி அனுப்பி வைத்தார்.

அது சொல்லவேண்டுமென்று கேட்டதற்கு கவீந்திரர் சொன்னது; முன்னே சிவாஜிராஜா ஜெயவல்லி என்கிற நகரத்தை வாங்கினவுடனே ஈசுவரனாயிருக்கப்பட்ட சிவாஜி ராஜாவுக்கு இந்த சூரியராஜா தன்னுடைய ராஜ்யத்தை தன்னுடைய சுவாதீனமாயிருக்கவேண்டுமென்று யோசனை பண்ணி நான் உமக்கு விலைக்கு வாங்கின பிள்ளையாக்கும். உம்முடைய குலாமனென்று காகிதம் எழுதி அனுப்பிவைத்தான். அதனாலே அன்றைய முதற்கொண்டு நமக்குச் சரணமாய் அடைந்தவனென்று அவனைக்காப்பாற்றிக்கொண்டுவந்தார். அவனும் ராஜாவினுடைய சேனைக்கு சிறிது இடங்களிலே சகாயமும் பண்ணிக்கொண்டு வந்தான்.

அதற்குமேல் கிராசாரத்தினாலே துற்புத்தி தோன்றி வெகு கடினமாயிருக்கப்பட்ட காட்டிலே இருக்கிறோமென்று கர்வத்தினாலே சத்துருவாயிருக்கப்பட்ட எதிலிஷர்வுக்கு கண்டும் காணாமலும் சகாயத்தைப் பண்ணிக்கொண்டு வந்தான். அப்படிப்பட்ட அபராதங்களை பண்ணினாலும் முன்னே நமக்கு சரணமாய் வந்தவனுக்கு நாம் பிடிக்கலாகாதென்று அவன் மேலே போகவில்லை. எப்போது மரியாதையோடு மனிதனைவிட்டு அழைத்தனுப்பியதற்கு வராமல் இருந்தபடியினாலே ராஜாவுக்கு கோபம் வந்து பதினையாயிரம் காலாட்கள் ஜனத்தோடு தான் பல்லக்கிலே உட்கார்ந்துகொண்டு சாற்வர் என்கிற புரத்துக்கு வந்து சிங்காரபுரத்துக்குச் சமீபமாய் போகும்போது ராஜா வரும் சேதி சூரியராஜர் கேட்டு விசனத்தோடு தனக்கு சகியாளாயிருக்கப்பட்ட பேரை அழைத்துச் சொன்னது; மகாபாகுவாயிருக்கப்பட்ட சிவாஜிராஜா இந்த சிங்காரபுரம் வாங்க வேண்டுமென்று சமீபத்திலே வந்துவிட்டார். அவர் மகாபராக்கிரமியாயிருக்கப்

பட்டவர். அவரோடு நாம் யுத்தம் பண்ணமாட்டோம் என்று யோசனைபண்ணி ஓடிப்போய்விட்டானென்று கவீந்திரர் சொன்னதைக்கேட்டு பிராமணர் கேட்டது; மகாசூரனுயிருக்க யுத்தத்திலேயும் சமர்த்தனுயிருக்க சைய பர்வதம் வரைக்கும் அவனுடைய ஆக்ஞைகள் நடந்துகொண்டிருக்க பூர்வமாயிருக்கப்பட்ட சிம்மாசனத்தை அடைந்திருக்க சமுத்திரம் வரைக்கும் சுவாதீனமாயிருக்க தலைமுறை தலைமுறையாய் சூரராயிருக்கப்பட்ட சேனையோடு ஒருவராலும் ஜெயிக்கப்படாமல் சாத்திர தர்மம் தெரிந்தவனுயிருக்கப்பட்டவன் சிவாஜி ராஜாவோடு ஏன் சண்டை போடவில்லை என்று கேட்டான்.

அதற்குக் கவீந்திரர் சொன்னது; சிவாஜிராஜா சங்கமேசுவர நகரத்தி லிருந்து பல்லிவனத்துக்குப் போகும்போது அப்போது புத்தியீனனுயிருக்கப்பட்ட சூரியராஜா சிம்மத்துக்குச் சமானமாய் சூரர்களாயிருக்கப்பட்ட தன்னுடைய சேனுபதிகளை அழைத்து வைத்துக்கொண்டிருந்தான். அப்போது யுத்தப் பிரசங்கம் வரவில்லையென்று தன்னுடைய சேனுபதிகளுக்கு உத்தாரம் கொடுத்து அவரவர் ஊருக்குப் போகச்சொன்னுர். இப்போது இருந்தாற்போலிருந்து ஒருவருக்கும் தெரியாமல் சிவாஜிராஜா வந்தபடியினுலே தன்னுடைய சேனுபதிகளை அழைப்பதற்கு முடியாமல் போனபடியினுலே வெகு விசனத்தோடு யுத்தம் பண்ணுமல் ஓடிப்போய்விட்டான்.

முப்பத்தி இரண்டாம் அத்தியாயம்

அவன் ஓடிப்போன சேதி ராஜா கேட்டு வெகு அசக்கியமாயிருக்க, காட்டிலே பிரவேசித்து சிங்காரபுரத்துக்கு வந்து ஒருவராலும் ஜெயிக்கப்படாமல் இருக்கப்பட்ட நகரத்தைப் பார்த்து அவனுடைய சிம்மாசனத்தையும் காலாலே மிதித்து சூரியராஜா ஓடிப்போனுன். பார்த்தாயா கையிலே அகப்படவில்லை யென்று எண்ணிக்கொண்டு அதற்குமேல் அந்த நகரத்து ஜனங்களுக்கெல்லாம் அபயத்தைக் கொடுத்தார். ஓடிப்போன ஜனங்களெல்லோரும் திரும்ப வந்து எப்போதும்போல் சுகமாயிருந்தார்கள். அதன் பிறகு அந்த ராஜ்யத்தை திரும்ப பாஸ்கரனுக்குக் கொடுத்து காத்து நாளானபடியினுலே சிவாஜிராஜா அந்த சிங்காரத்திலே தானேயிருந்தாரென்று புத்திமனத்தராயிருக்கப்பட்ட பிராமணருக்கு கவீந்திரர் சொன்னுர்.[1]

1. இதற்கு மேல் தொடர்ச்சி வடமொழியிலும் தமிழாக்கத்திலும் கிடைக்கவில்லை.

PATHYĀPATHYAM

(Food, Prescribed & Proscribed)

FIRST PART

By

VAIDYA VISĀRADA

C. RAJARAJESVARA SARMA

Junior Research Officer,

Central Council of Ayurvedic Research, Sarasvati Mahal, Thanjavur

(Formerly Professor & Physician of

Sri Venkataramana Ayurvedic College & Dispensary, Madras)

Published by

Thiru N. KANDASWAMY PILLAI,

Honorary Secretary,

FOR THE ADMINISTRATIVE COMMITTEE OF

THE TANJORE MAHARAJA SERFOJI'S SARASVATI MAHAL LIBRARY,

THANJAVUR.

Saka 1894 Price Re. One A. D. 1972

பத்தியமும் அபத்தியமும்

(முதற்பகுதி)

ஆசிரியர்:

வைத்திய விசாரத

சி. இராஜராஜேச்வர சர்மா,

ஆயுர்வேத ஆராய்ச்சியாளர்,

மத்திய அரசாங்க ஆயுர்வேத நூல் ஆராய்ச்சித் துறை,

ஸரஸ்வதி மஹால், தஞ்சாவூர்.

**(முன்னுள் வெங்கடரமணு ஆயுர்வேத கலாசாலை ஆசிரியரும்
ஷை வைத்தியசாலை வைத்தியரும்)**

தஞ்சை ஸரஸ்வதி மஹால் நூல்நிலைய நிர்வாகக் குழுவிற்காக

கௌரவக் காரியதரிசி,

திரு. நீ. கந்தசாமிப் பிள்ளை அவர்களால்

வெளியிடப்பட்டது.

ஸ்ரீ வாணீ விலாஸ் அச்சகம், ஸ்ரீரங்கம்.

சகம் 1894 விலை ரூ. 1-00 **கி. பி. 1972**

PREFACE

This is the fifth of the series of pamphlets on Health and Hygiene published through our Library Journal and released as off prints. Two of the four earlier tracts, entitled *Āyurvedopadeśa*, dealt with the rules of healthy life to be observed in one's daily routine, one entitled *Garbhiṇi Rakśa*, with the rules of maternity and the other, called *Kaumāra Bhṛtya*, with the care of children. The topic taken up next under the heading, *Pathyā Pathya* is meant to set forth, at a practical level, the basic principles of food and nutrition elaborating on the healthy and the unhealthy qualities of the several articles of food and drink in common usage. The first part of this book, which is now published, deals with grains, pulses varieties of meat and fruits. The next part which will follow will be devoted to vegetables, edible roots and leaves and articles of drink like milk, honey etc.

The treatment of the topics by Vaidya Viśārada, Thiru C. Rajarajeswara Sarma in his highly commendable manner, is as authoritative as it is simple and clear. The quotations from the standard classics of Āyurveda make the compilation authoritative and the lucid exposition of the subject matter in easy Tamil brings the classical knowledge within the easy reach even of the lay man. The work being the first of its kind, the author deserves our sincere thanks for his service and our hearty congratulations for his achievement. We have no doubt that, like the previous booklets of this series, this one will be heartily welcomed and that the next one will be eagerly awaited.

N. KANDASWAMY,
Honorary Secretary,
T. M. S. S. M. Library.

Thanjavur
30—5—1972

॥ श्रीः ॥

முன்னுரை.

"षट्त्रिंशतं सहस्राणि रात्रीणां हितभोजनः ।
जीवत्यनातुरो जन्तुः ... ..." ॥ —चरकसंहिता

"இதமான உணவை உட்கொள்ளும் மனிதன் முப்பத்தாறாயிரம் இரவுகள் (நூறு வருடங்கள்) நோயற்றவனாக வாழ்கின்றான்" என்னும் சரகாசார்யரின் பொன்மொழி இதமான உணவின் பெருமையை எடுத்துக்கூறுகின்றது.

ஆகவே அவரவர்நிலைக்கேற்ற உணவையே தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துவதற்குதவுமாறு உணவுப்பொருள்களின் குணங்களை விளக்கும் பகுதிகளை ஆயுர்வேதநூற்களான சரக ஸம்ஹிதா, ஸுச்ருத ஸம்ஹிதா முதலிய பழைய நூல்களிலிருந்தும், பாவபிரகாசம், சாலிக்கிராம நிகண்டு போன்ற நவீன நூல்களிலிருந்தும் தேர்ந்தெடுத்து, ஒன்றுகூட்டி, வரிசைப்படுத்தி, எல்லோருக்கும் பயன்படுமாறு விரிவான மொழிபெயர்ப்புடன் "பத்தியாபத்தியம்" என்ற பெயரால் வெளியிடக்கருதி இதனை எழுதலானேன்.

இந்நூலின் முதற்பகுதியை இப்பொழுது பேரன்புடன் வெளியிட்டுதவிய தஞ்சை ஸரஸ்வதி மஹால் கார்யதரிசி உயர்திரு. N. கந்தசாமி பிள்ளை அவர்களுக்கும், மேற்படி நூலகக்காப்பாளர் உயர்திரு. V. கோபாலய்யங்கார், M.A., அவர்களுக்கும், இதைத் தொகுப்பதில் பெரிதும் வழிகாட்டி ஊக்குவித்துதவிய எனது குரு, உயர்திரு. V. S. வெங்கடஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள் அவர்களுக்கும், தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட எனக்கு இந்தத் தமிழ்மொழிபெயர்ப்பில் உதவிபுரிந்த நண்பர் புலவர் திரு. S. இராமலிங்கம் பிள்ளை அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஸரஸ்வதி மஹால்,
தஞ்சாவூர்.

C. ராஜராஜேச்வர சர்மா.

தேங்காயின் குணம்—

नालिकेरं गुरु स्निग्धं पित्तघ्नं स्वादुशीतलम् ।
बलमांसप्रदं हृद्यं बृंहणं वस्तिशोधनम् ॥ — सुश्रुतसंहिता

विशेषतः कोमलनारिकेलं निहन्ति पित्तज्वरपित्तदोषान् ।
तस्याम्भः शीतलं हृद्यं दीपनं शुक्रलं लघु ।
पिपासापित्तजित्स्वादु वस्तिशुद्धिकरं परम् ॥ — भावप्रकाशः

தேங்காய்—எளிதில் ஜீர்ணமாகக்கூடியதல்ல. நெய்ப்புடையது. பித்தத்தை அதிகப்படுத்தும். இனிப்பானது. குளிர்மையானது. வலிமை, சதை இவற்றை வளர்க்கும். இதயத்திற்கு நலம் செய்யும். உடம்பைத் தேற்றும். மூத்திரப்பையை சுத்தம் செய்கிறது. (ஸுச்ருதஸம்ஹிதா)

இளநீர்த்தேங்காய்—பித்தஜ்வரம், பித்தத்தினுண்டாகும் நோய்கள் இவற்றை விசேஷமாகக் கண்டிக்கும்,

இளநீர்—குளிர்மையானது. இதயத்திற்கு நன்மை செய்யும். பசித் தீயைத் தூண்டும். ஆண்மையைப் பெருக்கும். எளிதில் ஜீர்ணமாகும். விடாய், பித்தம் இவற்றைப் போக்கும். இனிப்பானது. மூத்திரப்பையை சுத்தம் செய்வதில் சிறந்தது. (பாவபிரகாசம்)

அத்திப்பழத்தின் குணம்—

तर्पणं बृंहणं फल्गु गुरु विष्टम्भि शीतलम् ॥ —चरकसंहिता

அத்திப்பழம்—திருப்தியைத் தரும். உடலைத் தேற்றும். எளிதில் ஜீர்ணமாகக்கூடியதல்ல. வயிற்றுப்பொருமலை உண்டாக்கும். குளிர்மையானது. (சரகஸம்ஹிதா)

இலுப்பைப்பழத்தின் குணம்—

फलं शीतं गुरु स्वादु शुक्रलं वातपित्तनुत् ।
अहृद्यं हन्ति तृष्णास्रदाहश्वासक्षतक्षयान् ॥ — भावप्रकाशः

இலுப்பைப் பழம்—குளிர்மையானது. எளிதில் ஜீர்ணமாகக்கூடியதல்ல. இனிப்பானது. விந்துவை வளர்க்கிறது. வாயு பித்தம் இவற்றைப் போக்குகிறது. இதயத்திற்கு இதமானதல்ல. விடாய், ரக்தத்தைப்பற்றிய நோய், எரிச்சல், இழைப்பு, ரக்தத்துடன் கூடிய இருமல், க்ஷயம் இவற்றைப் போக்குகிறது. (பாவபிரகாசம்)

வேப்பம் பழத்தின் குணம்—

निम्बस्य पक्वं मधुरं सतिक्तं स्निग्धं फलं शोणितपित्तरोगे ।
कफे प्रशस्तं नयनामयघ्नं क्षतक्षयघ्नं गुरु पिच्छिलं च ॥ —पथ्यापथ्यविबोधः

வேப்பம் பழம்—கசப்பு, இனிப்புச் சுவைகளையுடையது. நெய்ப்புள்ளது. ரக்தபித்தம் (கண், காது, மூக்கு, வாய், மலதுவாரங்கள், மயிர்க்காம்புகள் இவற்றின் வழியாக ரக்தம் கசிதல்) கபம் இவற்றில் சிறந்தது கண் நோய் ரக்தத்துடன் கூடிய இருமல், க்ஷயம் இவற்றைப் போக்கும். எளிதில் ஜீர்ணம் ஆகாது. பிசுபிசுப்புள்ளது. (பத்தியாபத்தியவிபோதம்)

நறுவலிப்பழத்தின் குணம்—

श्लेष्मातकः कटुहिमो मधुरः कषायः
स्वादुश्च पाचनकरः कृमिशूलहारी ।
आमास्रदोषमलरोधबहुव्रणार्ति-
विस्फोटशान्तिकरणः कफकारकश्च ॥ — भावप्रकाशः

